# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஏப்ரல் 2007 ஜீவியம் 12 மலர் 12

*இம்மாத மலரில். . . .*

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| *கவலையை முறியடிக்கும் நம்பிக்கை* | 2 |
| *இம்மாதச் செய்தி* | 5 |
| *லைப் டிவைன்* | 6 |
| *சாவித்ரி* | 12 |
| *யோக சக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்* | 14 |
| *அன்பர் கடிதம்* | 25 |
| *அமெரிக்காவின் முன்னேற்றத்திலிருந்து இந்தியர்களாகிய நாம் அறிந்து கொள்ள வேண்டியது* | 27 |
| *அஜெண்டா* | 32 |
| *மலரும் மணமும்* | 34 |
| *உலகம்-மோட்சம்-ஸ்ரீ அரவிந்தம்* | 50 |
| *யோக வாழ்க்கை விளக்கம் V* | 60 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-

## ஜீவியத்தின் ஓசை

✡ **சிறியதற்கு முடியாதது பெரியதற்கு முடியும்.**

**சுயநலத்திற்கு முடியாதது பர நலத்திற்கு முடியும்.**

**காலத்திற்கு முடியாதது காலத்தைக் கடந்தவர்க்கு முடியும்.**

✡ **ஒரு நிலையில் நாம் கைவிடும் முறைகள் அடுத்த உயர்நிலையில் மீண்டும் வேறொரு ரூபத்தில் வரும்.**

**வாய்விட்டு ஜபிப்பதை பகவான் வேண்டாம் என்று கைவிட்டார். ஒரு கட்டத்தில் அன்னை தன்னுடம்பிற்கு அது தேவையென்று ஏற்றுக் கொண்டார்.**

✡ **ஆண்டவன்மேல் ஆர்வம் வர மனிதனுள் ஆண்டவன் பிறக்க வேண்டும். மனிதனுக்குத் தானாக ஆர்வம் வருவதில்லை.**

# கவலையை முறியடிக்கும் நம்பிக்கை

என். அசோகன்

மனிதன் தீவிரத்தை (intensity) தேடுகிறான். அந்தத் தீவிரம் எதன்மூலம் கிடைத்தாலும் அதை ஏற்றுக்கொள்கிறான். திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் மனிதர்கள் நாடும் தீவிரத்தைத் தருவதால் மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெறுகின்றன. சில திருமண நிகழ்ச்சிகளில் மணமக்களின் பெற்றோர் தாமே திருமணம் செய்து கொள்வதுபோல உற்சாகத்துடன் செயல்படுவர். தீவிரத்தை நாடுபவர்கள் நல்வழிகளில் அது கிடைக்காவிட்டால் தவறான வழிகளிலும் அதைப் பெற முயல்வார்கள். கவலைப்படுவதுகூட மனிதன் தேடும் தீவிரத்தைத் தருவதால் அதையும் சில சமயங்களில் மனிதன் வரவேற்கிறான்.

வேலை தேடும் நண்பர் குழுவிடையே அதிகமாகத் தென்படுவது கவலைதான். கவலை மனிதனின் கற்பனையை விபரீத நிலைக்குக் கொண்டுபோகிறது. நாலு பேர் கவலையில் மூழ்கியிருக்கும்போது ஒருவர் மட்டும் அதனால் பாதிக்கப்படாமல் வழக்கம்போல் இருந்தால் அது மற்றவர்களுக்கு வியப்பாக இருக்கும். எப்படிக் கவலைப்படாமல் இவரால் இருக்க முடிகிறது என்று விசாரிப்பார்கள். வேலையில்லாத நிலைமையின் ஆபத்தை உணராமலிருப்பதால் கவலையற்றுள்ளதாகச் சமாதானம் சொல்லிக்கொள்வார்கள்.

நம்பிக்கை என்பது ஆன்மாவின், அறிவின் பிரதிபலிப்பாகும். ஒருவர் கவலையற்றுள்ளார் என்றால் அவருக்கு வேலை கிடைக்குமென்று அவருடைய ஆன்மாவிற்குத் தெரிகிறதென்று அர்த்தமாகும். ஆன்மாவிற்குத் தெரிந்த உண்மை அறிவில் நம்பிக்கையாக வெளிப்படுகிறது. இந்நம்பிக்கை அந்நபரை நிதானம் காக்க வைக்கிறது. அதனால் சிரமப்படாமல் அவரால் வேலையைத் தேடிக்கொள்ள முடிகிறது. இந்நம்பிக்கை இல்லாதபொழுது



மனிதன் தீவிரத்தைத் தேடுகிறான். இது கவலையில் போய் முடிகிறது. அவனுடைய எதிர்காலத்தைப் பற்றி அவனுடைய கற்பனை பலவிதமான எண்ணங்களை எழுப்புகிறது. மனக்கண்ணில் பயங்கரக் காட்சிகள் தெரிகின்றன. இக்கற்பனை இடையறாது ஓடுகிறது. இக்கற்பனையே, தான் தேடும் தீவிரத்தைத் தருவதால் இப்படிப்பட்ட கவலையில் மூழ்குபவர்கள் இதிலிருந்து விடுபட முன்வருவதில்லை.

இவர்களில் சில பேருக்கு அறிவுரைகள் வழங்கினால் செவிசாய்க்க வாய்ப்புள்ளது. கவலை தீவிரத்தைத் தந்தாலும் அது நல்லதன்று என்று புரிந்தால் அதிலிருந்து விடுபட முன்வருவார்கள். கவலைப்படுவதை சுவையான பொழுதுபோக்காக எடுத்துக்கொண்டவர்களை அதிலிருந்து மீட்பது கடினம்.

கவலைப்படுவது என்பது நம்மறிவின் இயற்கையான போக்காகும். மகன் வீட்டைவிட்டு வெளியேறினால் அவன் திரும்பி வரும்வரையிலும் அவனுக்கு எதுவும் ஆபத்து நேரிடாமல் இருக்கவேண்டுமென்று கவலைப்படுவது பல தாய்மார்களுடைய மனோபாவமாகும். கைதிகள் தூக்கிலிடப்படுவதைக் காண ஒரு வழக்கறிஞர் ஆசைப்பட்டார். அப்படியொரு காட்சியைக் கண்டபிறகு இரவில் தூக்கம் கெட்டுப்போய் மிகுந்த பயத்திற்கு ஆளானார். இதிலிருந்து விடுபட என்ன வழி என்று சிறைச்சாலை அதிகாரியுடன் கலந்து ஆலோசித்தார். அவ்வதிகாரி மேலும் சில தூக்கிலிடும் காட்சிகளைப் பார்க்கச் சொன்னார். அவ்வாறு பார்த்த பிறகு அந்தப் பயம் அவரைவிட்டு விலகியது.

பள்ளிக்குச் செல்லும் பிள்ளையோடு தாயார் தொடர்ந்து சில நாள்கள் தாமும் சென்றால், பையன் விபத்துக்குள்ளாகிவிடுவானோ என்ற பயம் தாயாரைவிட்டு விலகும். பயத்திலிருந்து விடுபடுவதற்குச் சுலபமான வழி அப்படி பயத்தை உண்டாக்கும் சூழ்நிலையைத் தொடர்ந்து சந்திப்பதுதான். பயத்தை நிரந்தரமாக எடுப்பதற்கு ஆன்மீக வழியொன்று உண்டு. அவ்வழி, பயத்தை தெய்வத்திடம் தொடர்ந்து சமர்ப்பணம் பண்ணிக்கொண்டே இருப்பதுதான். அப்படிச் செய்யும்பொழுது ஒரு

கட்டத்தில் இறைசக்தி அப்பயத்தைக் கரைத்துவிடும். இவ்வழியில் தீர்வு நிரந்தரமாகும்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

முறைகள் (systems) முதலில் அதிகப் பலன் தரும். பிறகு ஜீவனிழந்து பயனற்றதாகும். முறைகள் நம்மால் ஏற்படுத்தப்பட்டவை என்பதால் அவை செயல்படும் வகையைச் சற்று விரிவுபடுத்தி மீண்டும் அதற்கு ஜீவனளிக்க முடியும். கொடுமையும் அதிகாரமும் தங்கள் செல்வாக்கை இழந்துவிட்டபோதிலும் அவற்றிலுள்ள தீவிரப் பணிவை வளர்த்து மீண்டும் அவற்றைப் பயனுள்ளதாகச் செய்ய முடியும்.

***பயனற்ற முறைகளையும் ஜீவனுள்ளதாகச் செய்யலாம்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

கொடுமை, கடுமை, பொறாமை, துரோகம், வெறுப்பு, அறிவால் ஏற்படும் உணர்வு, தவறான அபிப்பிராயம் ஆகியவை பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திற்கு அவசியமானவை. யோகமே இது போன்ற ஒரு முயற்சியாகும். பரம்பொருளுக்குத் தேவையற்ற ஒன்றாகும்.

***மனிதனுக்குத் தேவைப்படும் கடுமையும் வெறுப்பும் யோகத்திற்கும் தேவை; பரம்பொருளுக்கில்லை.***



## இம்மாதச் செய்தி

**ஜீவாத்மாவே முடிவு என்பது ஜீவன்முக்தன்.**

**பரமாத்மாவே முடிவு என்பது அத்துவைத சித்தி.**

**ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும் தன்னுட்கொண்ட பிரம்மமே முடிவு என்பது ஸ்ரீ அரவிந்தம்.**

**தனக்காக வாழ்பவன் சுயநலமி.**

**பிறருக்காக வாழ்பவன் பரநலம் பாராட்டுபவன்.**

**பிறர் நலம் கொழிக்கும்படித் தன் சொந்த வாழ்வை அமைத்துக் கொள்பவனின் சுயநலத்துள் பரநலம் அடக்கம்.**

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

### XV. The Supreme Truth-Consciousness

This is the first operative principle of the divine Supermind. — Page No.136 Para No.9

It is a cosmic vision.

It is all-comprehensive, all-pervading and all-inhabiting.

It comprehends all things in being.

It does so in static self-awareness.

It is subjective, timeless, spaceless.

Therefore it comprehends all things in dynamic knowledge.

Therefore it governs their objective self-embodiment in Space and Time.

Here, the knower, the knowledge and the known are one. — Page No.137 Para No.10

They are not different entities.

Fundamentally they are one.

Our mentality needs a distinction.

Without it, it cannot proceed.



### 15. உயர்ந்த சத்தியஜீவியம்

தெய்வீக சத்தியஜீவியத்தின் முதல் சட்டம் இது. இச்சட்டத்தின்படி அது செயல்படுகிறது.

அது பிரபஞ்ச திருஷ்டி.

அனைத்தையும் தழுவும், அனைத்தையும் ஊடுருவும், அனைத்துள்ளும் வதியும் பார்வை அது.

அதன் அறிவு ஜீவியத்தினுடையது.

சலனமற்ற சுயஞானத்தை அது அறியும்.

அதன் ஞானம் அகத்திற்குரியது, காலத்தையும் இடத்தையும் கடந்தது.

எனவே அதனால் அனைத்தும் செயல்படும் ஞானத்தையும் அறிய முடிகிறது.

ஆகையால் காலம், இடத்துள் அவற்றின் புறச் சுயவிளக்கத்தை அறிய முடிகிறது.

இங்கு அறிபவன், அறிவு, அறியப்படுவது மூன்றும் ஒன்றாக உள்ளது.

அவை வெவ்வேறு விஷயங்களில்லை.

அடிப்படையில் அவை ஒன்றே.

மனம் அறிய விஷயம் பிரிந்திருக்க வேண்டும்.

பிரியாதவை மனத்திற்குப் புரியாது.

**Distinction is the means of action.**
**It is the fundamental law of action.**
**Losing it, it becomes motionless and inactive.**
**I regard myself mentally.**
**Still I have to make this distinction.**
**I am, as the knower.**
**I observe in myself something.**
**I regard that as object of my knowledge.**
**It is myself, yet not myself.**
**Knowledge links the Knower and the known.**
**But this is artificial.**
**It is purely practical.**
**It has the character of utilitarian.**
**It is evident.**
**It does not represent the fundamental truth of things.**
**The reality is different.**
**All the three are one.**
**I the knower am the consciousness which knows.**
**The knowledge is that consciousness.**
**It is myself operating.**
**The known also is myself.**
**It is a form or movement of the same consciousness.**
**The three are clearly one existence.**
**They are one movement.**
**It is indivisible, though seeming divided.**
**It is not distributed between its forms.**
**It does appear to distribute itself.**
**It appears to stand separate in each.**
**This is a knowledge mind can arrive at.**
**It can feel.**



**செயல் எழ வேறுபாடு அவசியம்.**
**செயலுக்குரிய அடிப்படைச் சட்டம் அது.**
**வேறுபாடில்லைஎனில் செயலற்று, சலனமற்றுப்போகும்.**
**நான் என்னை அறிவேன்.**
**இருப்பினும் நான் இந்த வேறுபாட்டை அறிய வேண்டும்.**
**நான் இருக்கிறேன்; நான் அறிபவன்.**
**என்னுள் நான் ஒரு விஷயத்தைக் காண்கிறேன்.**
**அதை என் அறிவுக்குரிய பொருளாகக் கருதுகிறேன்.**
**அது நான், என்றாலும் அது நானில்லை.**
**அறிவு, அறிபவனையும் அறியப்படுபவனையும் இணைக்கும்.**
**இது செயற்கையான செயல்.**
**இது முழுவதும் நடைமுறைக்குரியது.**
**பலன் கருதி செயல்படும் சுபாவம் இங்குத் தெரிகிறது.**
**அது தெளிவு.**
**இது அடிப்படையான உண்மையைப் பிரதிபலிக்கவில்லை.**
**உண்மை வேறு.**
**இம்மூன்றும் ஒன்றே.**
**அறிபவனான நான் அறியும் ஜீவியமாவேன்.**
**அறிவு அந்த ஜீவியம்.**
**இது நான் செயல்படுவது.**
**அறியப்படுவதும் நானே.**
**அது ரூபம் அல்லது ஜீவியத்தின் சலனம்.**
**இம்மூன்றும் ஒன்றே என்பது தெரிகிறது.**
**ஒரே சலனத்தின் மூன்று பகுதிகள் அவை.**
**பிரிந்து தெரிந்தாலும், அவற்றைப் பகுக்க முடியாது.**
**அதன் ரூபங்கள் அதைப் பகிர்ந்து வினியோகம் செய்யவில்லை.**
**தன்னை அது வினியோகம் செய்வதாகத் தோன்றுகிறது.**
**தனித்தனியே பிரிந்து நிற்பதாகத் தோன்றுகிறது.**
**இந்த ஞானம் மனம் அறியக்கூடியது.**
**என்னால் உணரமுடியும்.**

**It cannot make this knowledge the basis of its operations.**
**There are objects external to me.**
**I call that myself.**
**I am a form of consciousness.**
**Here the difficulty is insuperable.**
**Even to feel the unity there is abnormal.**
**To act on it continually is new action.**
**It is foreign to Mind.**
**It does not properly belong to the Mind.**
**Mind can concede that truth.**
**That would correct its normal activities.**
**Our activities are based on division.**
**We know the earth goes round the sun.**
**We see the sun going round the earth.**
**Our knowledge does not prevent us from seeing.**
**The senses persist in seeing the sun in motion round the earth.**

*Contd....*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

தனித்தன்மையைச் சிருஷ்டிப்பது இயற்கைக்கு முன்னேற்றம். தனித்தன்மை பொதுத்தன்மையாவது தனித்தன்மைக்கு முன்னேற்றம். அதற்குத் தனித்தன்மை, தன்னை இழந்து மற்றதுடன் கலக்க வேண்டும். இயற்கை முரண்பாடுகளால் முன்னேறும் முறை இது.

***தனித்தன்மை தன்னையிழந்து பொதுத்தன்மையாகிறது.***



**இந்த ஞானத்தின் அடிப்படையில் என்னால் செயல்பட முடியாது.**
**மேலும் புறத்தில் பொருள்கள் உள்ளன.**
**நான் அவற்றை 'நான்' என்கிறேன்.**
**நான் ஜீவியத்தின் ரூபம்.**
**இங்குச் சிரமம் அதிகம்.**
**புறப்பொருள்களுடன் ஐக்கியமாக உணர்வது வழக்கத்திற்கு மாறானது.**
**அந்த அடிப்படையில் செயல்படுவது நமக்குப் புதியது.**
**அது மனத்திற்குப் புறம்பானது.**
**அத்திறன் மனத்தைச் சேர்ந்ததில்லை.**
**இவ்வுண்மையை மனம் ஏற்கும்.**
**அது அதன் இயல்பான செயல்களைத் திருத்தும்.**
**நம் செயல்கள் பிரிவினையின் அடிப்படையில் அமைந்தன.**
**பூமி சூரியனைச் சுற்றுவதை நாமறிவோம்.**
**சூரியன் பூமியைச் சுற்றி வருவதை நாம் காண்கிறோம்.**
**நம் அறிவு நாம் பார்ப்பதைத் தடுப்பதில்லை.**
**புலன்கள் சூரியன் பூமியைச் சுற்றி வருவதையே காண்கின்றன.**

*தொடரும்....*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நீ மறந்துபொழுதும் உன்னையே நம்பியிருப்பது மனித உறவில் நிலையான தொடர்பு. அப்படிப்பட்ட மனிதனை முழுவதும் நம்பியிருப்பதுபோல் அவனிடம் நடந்துகொண்டால் அது தெய்வீகத் தொடர்பாகும். மனிதச் சுபாவத்தின் இருள் நிறைந்த சாகஸங்களை அறிய அது உதவும்.

***சுபாவம் சாகஸமானது.***

## P.70 He in a petty coastal traffic plies

### கடலோரம் கண்ட சிறுதொழில்

✡ துறைமுகந்தோறும் காணும் வருமானம்.

✡ மாற்றமற்ற தொழிலின் நிலையான வருமானம் தரும் நிம்மதி.

✡ புதியதைப் புறக்கணித்து பழக்கமற்றதை விலக்கும் மனநிலை.

✡ பெருங்கடலின் பேர்ஆரவாரம் கேட்கிறது.

✡ விரிந்து பரவும் உலகம் தொலைவிலிருந்து அழைக்கிறது.

✡ அகண்ட திருஷ்டியின் வளையும் வட்டத்துள் செய்யும் பயணம்.

✡ முகந்தெரியாத மக்களும் இனம் தெரியாத இடங்களும்.

✡ வணிகக் கலத்தின் இலட்சிய வண்ணம்.

✡ காலமெனும் குபேரனின் உலகத்து வாணிகம்.

✡ நிலங்கொண்ட நீர்ப்பரப்பின் நுரை நிறைந்த கடல்.

✡ கண்டறியாத நாடுகளின் தொலைவிலுள்ள துறைமுகங்கள்.

✡ வாழ்வின் வளம் நிறைந்த சுபிட்சத்தின் வாயிலாகும் வணிகத்துறை.

✡ செதுக்கப்பட்ட சிற்பங்கள், வடிவொழுகும் வண்ணச்சீலைகள், பொன் சுமக்கும் பொதிகள்.

✡ மணி பதித்த பொம்மைகள் மணியான குழந்தைகள்.

✡ கடின உழைப்பின் கலங்கிய பரிசுகள்.

✡ மின்னலென மறையும் சுவர்க்கச் சுவைகள் வந்தது அழிகிறது.

✡ கற்றூண் வாயிலைக் கடந்து வருகின்றன.

✡ இனம் தெரியாத கடலோரம் நெருங்கிவரும் கப்பலோட்டம்.

✡ தூரம் துலங்கும் கனவூடே பயணம்.

✡ பெயரறியாத சமுத்திரத்தைக் கடக்க மறுக்கும் மனம்.

✡ புயலிடமிருந்து புகலிடம் தேடும் புதுமை.



✡ எண்ணமெனும் காந்தம் எடுத்துரைக்கும் பாதை.

✡ விண்மீன் விளங்காத ஜோதியின் பொலிவுள் மூழ்கினான்.

✡ அறியாமையின் சந்தைகளைக் கடந்துவந்தான்.

✡ புதிய துறைகளைப் புலப்பிக்கும் மரக்கலம்.

✡ கற்பனையைக் கடந்த கண்டங்களைக் கண்டான்.

✡ புண்ணிய ஆத்மாக்களின் தீவுகளைத் தேடுபவன்.

✡ முடிவான கடலோரம் கடந்து, முடிவற்ற கடலையடைந்தும், தவச்சின்னமான பிரம்ம சிருஷ்டியை நோக்கிச் செல்கிறான்.

✡ காலம் வகுத்த கதியை வாழ்வு மாற்றும்.

✡ அதன் பிம்பங்கள் அனந்தத்தின் திரைகள்.

✡ புவியின் எல்லை புலப்படாமல் நகருகிறது.

✡ வாயுமண்டலம் வண்ணத்திரையாக மறைப்பதில்லை.

✡ அழியும் எண்ணமும் நம்பிக்கையும் அவனைக் கடந்தன.

✡ பூமியின் எல்லையில் புதுமையைக் காண்கிறான்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பொறுமைக்கு ஓர் அடையாளம் பிறர் அவசரம் நம்மை பாதிக்கக்கூடாது.

*எவர் அவசரமும் பாதிக்காதது பொறுமை.*

### ஸ்ரீ அரவிந்த சுடர்

**தன்னலமற்றவரின் இரகஸ்யம் மௌனத்தை அளிக்கும். பிறருக்கு அதிகமாகக் கொடுக்க உதவும். தன்னலமற்ற திறமையை அதிகரிக்க உதவும்.**

# யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**26. அதிகபட்சம் நல்லெண்ணத்தை உற்பத்தி செய்வது.**

❀ நல்லெண்ணமுள்ளவர் முகம் பிரகாசமாக இருக்கும்; புன்னகை தவழும்; கலகலப்பாக இருப்பார்.

❀ எல்லோருக்கும் நல்லெண்ணமுண்டு. அது எல்லோரிடத்திலும் இருப்பது அரிது.

❀ வேண்டியவர் மீது நல்லெண்ணம் அனைவருக்கும் உண்டு.

❀ வேண்டாதவர் நினைவு வாராது.

❀ வேண்டாதவரும் வாழ நினைப்பவர் உண்டு; அதிகமில்லை.

❀ எவரும் கஷ்டப்படக்கூடாதுஎன்ற எண்ணமுள்ளவர் நல்ல அன்புள்ளம் உள்ளவர்.

❀ எவரும் வாழக்கூடாதுஎன்று நினைப்பவரை அநேகம் பேர் பார்த்திருக்க மாட்டார்கள்.

❀ வேண்டியவர் மீதும் கெட்ட எண்ணம் உள்ளவர் அரிபொருள். அப்படிப்பட்டவர் தவிர்க்க முடியாத உறவானால் (பெற்றோர், பிள்ளைகள், குரு, சிஷ்யன், பார்ட்னர், தம்பதி) வாழ்க்கை நரகமாகும். அதற்கு உலகில் பரிகாரமில்லை. அவர் உன் தகப்பனாரானால் அவர் வாழ நினைத்தால் கார் நேரே மோத வரும்.

❀ ஆன்மீகச் சட்டப்படி அனைவருக்கும் நல்லெண்ணம் உண்டு. அதற்கெதிரானதும் உண்மை. அனைவருக்கும் கெட்ட எண்ணம் உண்டு. அவை பொதுச் சட்டம்.

❀ நமக்குப் பிறரைவிட நாமே முக்கியம்; நம் மனமே முக்கியம்.

❀ நாம் ஏற்றுக்கொண்ட method முறை பிறர் மீது அதிகபட்ச



நல்லெண்ணம் உற்பத்தியானால் இதுவரை நடக்காத பெரிய காரியம் உற்பத்தியாகி நடக்கும்.

❀ நம் மனத்தில் பலர் மீது நல்லெண்ணம் உண்டு.

அதை அனைவருக்கும் தர முயலலாம்.

ஒருவர் மீதுள்ள நல்லெண்ணத்தைச் சற்று உயர்த்த முயலலாம்.

தங்கைக்கு வசதி வேண்டும், அண்ணன் எலக்ஷனில் ஜெயிக்க வேண்டும், நண்பன் வியாபாரம் பெருக வேண்டும், நாடு செழிப்படைய வேண்டும், எதிர்வீட்டுப் பையன் IAS பாஸ் செய்ய வேண்டும் என்பன நல்லெண்ணங்கள்.

அவற்றை நினைக்க முயன்றால் சில சமயங்களில் மறந்துபோகும்; மற்ற சமயங்களில் சலிப்பு ஏற்படும்.

இதற்கு மேல் அவருக்கு எதற்குஎனத் தோன்றும்.

தம்பி உயர்ந்தால் எனக்கு மரியாதையிருக்காதுஎன்று மனம் நினைக்கும்.

எதிர்வீட்டுப் பையன் IAS பாஸ் செய்தால் அவர்கள் நம்மை மதிக்க மாட்டார்கள்என மனம் நினைக்கும்.

அவற்றையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு ஒருவர் மீதுள்ள நல்லெண்ணத்தை அதிகபட்சம் உயர்த்தினால், அது நம் மனம் மகிழும் செயலானால் நம் பாதை சரியானது.

நினைவாலும் பிறர் வாழ மனம் பொறுக்காதுஎன்பது மனத்தின் சட்டம்.

நாம் நல்லெண்ணத்தை எல்லையைக் கடந்து உயர்த்தினால் **மனத்தைக் கடக்கிறோம்**எனப் பொருள்.

மனத்தைக் கடந்தால் எட்டுவது சத்தியஜீவியம்.

அதன் பொன்னொளி ஒரு சிறிது நம்மீது பட்டால் நம் எண்ணம் நிறைவேறும்.

தடையின்றி எழும் நல்லெண்ணத்திற்கு அத்திறனுண்டு.

அந்த எண்ணத்தால் மனம் மகிழ்வது எண்ணம் பலிக்கும் எனப் பொருள்.

எவரும் பின்பற்றக்கூடிய எளிய உயர்ந்த முறை. இது என்னால் முடியாதுஎன எவரும் கூற முடியாத முறை. இதைக் கேட்ட ஒரு 'புண்ணிய ஆத்மா', "ஏன் அவர் வாழ நான் நினைக்க வேண்டும்" என்றார். அடுத்தவர், "நான் அப்படி நினைப்பதால் அவர் வாழ்ந்து விட்டால் என்ன செய்வது?" என ஆத்திரப்பட்டார்!

**27. நாட்டைப் பற்றிய உன் சிறந்த நோக்கத்தை மேலும் உயர்த்துவது.**

தேசபக்தி என்பது மிகஉயர்ந்த குணம்.

நாட்டிற்காக உயிரையும், உரிமையையும் தியாகம் செய்ய எவரும் விரும்புவர்.

நாடு என்பது பிறந்த மண்.

ஊர் நாம் பிறந்த இடம்.

வெளிநாட்டில் போய் நெடுங்காலம் தங்கியவர் கடைசிநேரம் சொந்த ஊருக்கு வர ஆசைப்படுவர்.

போர் வந்தபிறகு போர்முனையில் நாட்டிற்காக உயிர்விடும் சந்தர்ப்பத்தைத் தவற மனம் வாராது.

இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் உயிர் நீத்த திருப்பூர் குமரன், பகத்சிங் வரலாற்றில் பொன்னான பகுதிகள்.

இன்று தேவைப்படுவது சுபிட்சம், சுதந்திரமில்லை.

சுபிட்சத்தின் உருவங்கள் ஏராளம்.

அதேபோல் நாடு முன்னேற சுதந்திரம், சுபிட்சம் தவிர ஆயிரம் முறைகளுண்டு.

அவற்றுள் நாமறிந்த சில:

- ❀ பசி, பட்டினி அறவே அழிய வேண்டும்.
- ❀ அனைவரும் நல்ல அளவுக்குக் கல்வி பெறவேண்டும்.



- ❀ எந்த இளைஞனும் அவன் விழையும் படிப்பைத் தடையின்றி பெற வேண்டும்.
- ❀ அமெரிக்கா போனவுடன் நம் நாடு எப்பொழுது இதுபோலாகும் என மனம் ஏங்குகிறது.
- ❀ அங்கு, சுத்தமான வீதிகள், அலங்காரமான கடைகள், அழகொழுகும் வீடுகளைக் கண்டு இந்தியா இப்படியிருக்க வேண்டும்என நினைக்கிறோம்.
- ❀ பிற நாட்டில் Q-வரிசை நம் நாட்டில் கூட்டமாய் இடித்துக்கொள்வதை நினைவுபடுத்தும்.
- ❀ அங்கு எந்த ஜட்ஜுக்கும் இலஞ்சம் கொடுக்க முடியாது.
- ❀ நிலம் விளைநிலமாகப் பொன் விளைகிறது.
- ❀ கல்லூரி மாணவன் நம் நாட்டுப் பேராசிரியர் போலிருக்கிறான்.
- ❀ 'இலஞ்சம் அழிய வேண்டும்' என நினைப்பவர் ஏராளம்.
- ❀ இந்தியன் என்றால் வெளியில் மரியாதை வேண்டும்என்பது ஒன்று.
- ❀ இந்தியர் நோபல் பரிசு பெற வேண்டும்.
- ❀ உலகத் தலைவர் இங்கு பிறக்க வேண்டும்.
- ❀ இந்தியர் என்றால் உத்தமர்எனப் பெயர் வாங்க வேண்டும்.
- ❀ இந்தியா ஜகத்குருவாக வேண்டும்.
- ❀ காரில்லாமல், வீடில்லாமல் எங்கும் இருக்கக்கூடாது.
- ❀ வயதானபின் கேட்பாரில்லாமல் அனாதையாக மக்களிருப்பது கொடுமை.
- ❀ மாமியார் கொடுமை, மருமகள் கொடுமை, கொடுமை.
- ❀ இந்தியா உலகுக்கு நல்லது செய்ய வேண்டும்.

இந்தப் பட்டியலுக்கு முடிவில்லை.

இது உயர்ந்த கருத்து. நான் இங்குக் கருதுவது "நாட்டைப் பற்றிய என் நல்லெண்ணம் எப்படி என் வாழ்வுப் பிரச்சினைகளைத் தீர்த்து, வாழ்க்கை

வாய்ப்புமயமானது” என்ற தத்துவம்.

இது சம்பந்தமான ஆன்மீகச் சட்டத்தை நான் அடிக்கடி எழுதுகிறேன். மீண்டும் கூறினால், “வேலை எதுவானாலும் பொறுப்போடு, சிறப்பாக, நம் சக்தி முழுவதும் செலவாகும்படி exhaust our energies செய்தால் மேற்சொன்னபடி பிரச்சினைகள் வாய்ப்பாக மாறும்”.

எப்படி இச்செயல் அந்த இலட்சியத்தைப் பூர்த்தி செய்யும்?

❀ நம் சக்தி முழுவதும் செலவானால் நாம் நம் சுபாவத்தைக் கடந்து அதன் எல்லையில் நிற்போம்.

சுபாவத்தைக் கடக்குமிடத்தில் அன்னை காத்திருக்கிறார்.

சிருஷ்டி என்பது சுயரூபம் சுபாவம் பெறுவது.

சுபாவத்தைக் கடந்தால் சுயரூபம் எழும்.

அது வீரியமான விஸ்வரூபம் எடுக்கவல்லது.

சுயரூபமும் - சொரூபம் - அழிவது யோகம்.

சுபாவம் அழிந்து எழும் சுயரூபம் பக்தர்கட்கு அவர்களை ஓரளவு அன்னையின் காலடியில் கொண்டுவிடும்.

அது பிரச்சினையை வாய்ப்பாக்கும்.

❀ ஓர் உதாரணத்தை எடுத்துக்கொள்வோம்.

கிராமத்தில் சிறுவர்கள் பள்ளிக்கு வர முடியவில்லைஎன்ற ஏக்கம் காமராஜருக்குப் பெரியது.

மதிய உணவு திட்டத்தை ஆரம்பித்தார்.

ஒருவனைப் படிக்க வைத்துவிட்டால் அவன் முன்னேறிவிடுவான் என்பது காமராஜ் தம் அனுபவத்தில் கண்டது.

SSLC வரைக்கும் இலவசப் படிப்புஎன்று கூறினார்.

அவர் பதவியிலிருந்தார்; நாம் பதவியிலில்லை.

அவருக்கு அந்த எண்ணம் என்ன செய்தது?

தமிழ்நாட்டுத் தலைவர், அகில இந்தியத் தலைவரானார்.



10 ஆண்டு அரசியலில் அவருக்குப் பிரச்சினையேயில்லை என Shankar's Weekly cartoon போட்டது.

நாம் பதவியிலில்லாவிட்டாலும் அன்பர்கள் என்பதால் பதவியில் உள்ளவருக்குள்ள சக்தி நம் எண்ணத்திற்கு உண்டு.

❀ இலஞ்சம் அழிய வேண்டும்என்பது உங்கள் இலட்சியமானால், மனம் எந்தெந்த வழியில் அதை ஒழிக்கலாம்எனக் கருதினால், அந்த எண்ணம் ஏதாவது ஒரு வகையில் நாட்டில் அமுலாவதைக் காணலாம்.

நாம் இலஞ்சம் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

புதிய சட்டங்கள் இலஞ்சம் வாங்க முடியாதபடி வரும்.

கம்ப்யூட்டர் வந்து பேர் அளவுக்கு இலஞ்சத்தைத் தடுக்கும்.

❀ இந்த எண்ணத்தை இதேபோல் தொடர்வது ஒரு நிலை.

சற்று உயர்த்த, “மனிதனுக்குத் தன்மானம் வேண்டும்” என்று கூறலாம்.

உங்கள் மனம் அந்த எண்ணத்தைத் தீவிரமாக ஏற்கும்பொழுது ஊழியர், ஆபீசர், தொண்டர்கள் தன்மானமுடையவராக ஓரளவு செயல்படுவது, பேசுவது, நினைப்பது காதில் விழும்; கண்ணில் படும்; அதற்குரிய சட்டம் எழும்.

❀ அதையும் உயர்த்தலாம்.

தன்மானமுள்ளவரே அரசியலில் பதவிக்கு வரலாம்என்பது அடுத்த கட்டம்.

எந்த இலட்சியத்தையும் சற்று உயர்த்தலாம்.

உயர்த்தினால் உயர்வதைக் காணலாம்.

எண்ணம் உயரும்பொழுது மனநிலை உயர்வதைக் காணலாம்.

உயர்வுக்கு முடிவில்லை.

முயற்சிக்கும் முடிவில்லை.

**சக்தி தீருமிடத்தில், தானே எதுவும் முடியும்.**

அது நம் இலக்கு.

நம் வாழ்வு உயரும்.

நம் வாழ்வு உயர்வதுபோல் நாடு உயர வேண்டும்என்பது நல்லது.

மனம் நம்மை விட்டகன்று மதரில் நிலைக்கும்.

நிலைப்பது திளைப்பது.

நாடுஎன்பது பாரதமாதா.

பாரதமாதா இன்று பிளவுபட்டிருக்கிறாள்.

அவள் ஒன்றுபட விழைவது உயர்ந்த இலட்சியம்.

நாடு ஒன்றுபட்டால் இந்தியா ஜகத்குருவாகும்என பகவான் கூறியுள்ளார்.

அவர் முதலிரண்டு கனவுகள் - இந்திய விடுதலை, ஆசிய விடுதலை - 1950இல் பலித்தது.

உலகம் ஒன்றுபடுவது அடுத்த கனவு.

ஜகத்குரு அடுத்தது.

சத்தியஜீவன் ஜனிப்பது முடிவான இலட்சியம்.

## 28. பெற்றோர் குறைகளை நம் வாழ்வில் விலக்குவது.

கல்லூரியைவிட்டு வந்தவுடன் ஓர் இளைஞர் தம்மைக் கூர்மையாக கவனித்தார். அவர் கண்டது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. மற்றவர்களைக் கவனித்தார். ஆச்சரியம் மாறி அனுபவமாயிற்று. ஒரு முறை அவர் நண்பரிடையே ஆணித்தரமாக,

> ''நாம் படிக்கலாம், அரசியல் பேசலாம், இலட்சியமாக இருக்க கங்கணம் கட்டிக்கொள்ளலாம். ஆனால் விஷயம் பெரியதாகி நாமே சொந்த முடிவெடுக்கும்நேரம் வந்தால், எல்லாம் மறந்துபோகும். மனம் குழம்பும். அந்தநேரம் தகப்பனார் செய்ததை அப்படியே செய்வோம்'' என்றார்.

கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு ஓராண்டு ஆசிரியராக வேலை



செய்துவிட்டு வக்கீலாகப் போனார். ஊரில் பெரிய வக்கீலுக்கு ஜூனியரானார். இது நடந்தது 1960. அவர் கூறியதை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். சுமார் 10 ஆண்டுகளாக நான் Psychology புத்தகங்களில் படித்ததை அவர் அனுபவரீதியாகக் கேட்டேன். அன்று முதல் இன்று வரை நான் இது சம்பந்தமாகக் கண்டவை இந்த இளைஞர் கூறியதை ஆழ்ந்து ஊர்ஜிதப்படுத்துகின்றன. என் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு அன்னையின் சொற்கள் இவ்விஷயத்தில் எப்படிச் செயல்படுகின்றனஎன்று கண்டு மேற்சொன்ன கருத்தை எழுதினேன்.

❀ **பெற்றோர் குறையை விலக்குவது நம் நிறத்தை மாற்றுவதுபோன்றது. அது நடவாத காரியம். அன்னையை ஏற்றவர் அக்குறையைச் சற்று மாற்ற முயன்றால், முடிவு செய்தால், அன்னை வாழ்வின் போக்கையே மாற்றி நம் முடிவைப் பூர்த்தி செய்கிறார்.**

கடன் ஏராளமாக வாங்கி வட்டியும் கட்டியறியாதவர் பேரன் ஒருவர் அன்னையை ஏற்றார். அவர் கடனே வாங்க நினைக்காதபொழுது பெருந்தொகையை அடுத்தவர் வலியக் கடனாகக் கொடுத்தனர். இது தாத்தாவின் செயல், நான் கடனைத் திருப்பித்தர வேண்டும்எனச் செய்த முடிவை அன்னை நிறைவேற்றிய அற்புதத்தை அன்னையை அறியாதவரால் நம்பமுடியாது. அடுத்தபேரன் வாழ்விலும், அவர் தகப்பனார் வாழ்விலும் கடன் முன்தலைமுறையில் செய்த அதே வேலையை, அதே பாணியில், ஆனால் - மாறிய உலகில் - அளவுகடந்து பெருக்கி அத்தனையையும் அழித்தது.

**கர்மம் கனத்தது. எவராலும் மீறமுடியாது. அன்னை அதையும் அழிப்பார்.**

தகப்பனாரைக் காப்பாற்றாதவரும் தாயைக் காப்பாற்றத் தவறுவதில்லை. பல பிள்ளைகளிருந்தும் எவரும் தாயைக் கவனிக்க மறுப்பது உலகில் காணமுடியாத ஒன்று. அவர்களைப் பிள்ளைகள் காப்பாற்றுவார்என நினைப்பது கனவு. பெற்றோர் குறை ஏராளம். அவை நம்மிடம் அதிகமாக இருக்கும். அதிலிருந்து விலக முடிவு செய்வதே கடினம். அந்த முடிவுக்கே பெரும்பலன் உண்டு. சற்று விலகினால் அளவுகடந்த பலன் காத்திருக்கும்.

நடத்தை தவறான பெற்றோர் தங்கள் பிள்ளைகள் அதையே அதிகமாகச் செய்வதைக் காண்பர். அப்பிள்ளைகள் சரியாக நடக்க முடிவு செய்வது மலையை நகர்த்துவதுபோலாகும். அன்னை சக்தி வருமுன் அதைச் செய்யும் சக்தியொன்றில்லை. இது பெரிய முறை. பின்பற்றினால் பலன் ஏராளம்.

**29. வாழ்வை செயல்படச் செய்வது Evoke a Life Response.**

கன்று போட்ட மாட்டை விலைக்கு வாங்கியவன் அதை பிடித்துக் கொண்டு போக முயன்றால், மாடு முட்டும், வாராது. கன்றை பிடித்துக் கொண்டு போனால் மாடு தானே பின்னே வரும். **அறிவு மாட்டை இழுக்கிறது. அனுபவம் கன்றை இழுத்துப் போகிறது**.

மகனுக்கு மெடிக்கல் கல்லூரியில் இடம் தேடி அலைபவர், பணம் புரட்டுகிறார், சிபாரிசு தேடுகிறார், அலைகிறார். அது மாட்டை இழுத்துப் போவதுபோன்றது. அவருடைய அண்ணன் மகன் அவர் தங்கைப் பெண்ணை மணக்க விரும்புவதை இவர் முனைந்து தடை செய்கிறார். இவருக்கு அத்திருமணத்தால் இலாபமோ, நஷ்டமோ இல்லைஎன்றாலும், அதைத் தடை செய்வது ருசியாக இருக்கிறது. அந்த இடத்தில் இவர் மனம் மாறினால் அட்மிஷன் சுலபமாகக் கிடைக்கும்; அநேகமாகப் பணமும் தர வேண்டியிருக்காதுஎன்று இவர் அறியமாட்டார். வேறு காரணத்தால் அத்திருமணம் பையன் விருப்பப்படி நடக்கும் அன்று இவருக்கு அட்மிஷன் கிடைக்கும்.

❀ இந்தச் சட்டம் நாமறியாதது. நம் மரபில் இதன் உட்பொருளை அறிவர். ஆனால் நடைமுறையில் அது இல்லை.

❀ இதுவரை நம் அனுபவத்தை நினைவுகூர்ந்தால், அன்று விளங்காதது இன்று விளங்கும்.

❀ கடமையைச் செய்ய மனம் வருவதில்லை. ஆசையை அளவுகடந்து பூர்த்தி செய்ய ஆர்வம் அதிகமாக இருக்கும்.

❀ வாழ்வு நீர்ப்பரப்புபோல் மட்டமாக இருக்கிறது (maintains an equilibrium). ஒரு குடம் நீரை எடுத்துவிட்டால் மட்டம் ½ அங்குலம்



இறங்குகிறதுஎன்பது நாம் தினமும் காண்பதுஎன்றாலும், மனதைத் தொட முடியாது.

❀ நான் செய்யாதது எனக்கு வாராது.

என் மனத்திலோ, செயலிலோ இல்லாதது எனக்கு வாழ்வில் நடக்காது. என் மருமகளை நான் கொடுமைப்படுத்தும் அதே நேரம் என் மகளை அவள் மாமியார் கொடுமைப்படுத்துவதை ஆயிரம் முறை கண்டாலும், காரணம் புரியவில்லை.

என் மருமகள் எனக்கு அடங்க வேண்டும், என் சம்பந்தி எனக்கு அடங்க வேண்டும்என்பது அகந்தை. அதுவே மனம் விழைவது.

எனக்கு மருமகள்என்பவள் இல்லையேஎன்றாலும் எனக்குக் கொடுமைப்படுத்தும் மனம் உண்டுஎன எவரும் ஏற்கமாட்டார்கள். அதற்கு Sincerity உண்மைஎனப் பெயர்.

நான் எனக்கு உட்பட்டவரைப் பட்டினி போட்டால், என் மருமகள் என்னைப் பட்டினி போடுகிறாள் என்பதை அறிய ஆத்ம விழிப்பு தேவை.

இதையறிய அறிவு தேவையில்லை; அடக்கம் தேவை.

4 இலட்சம் ரூபாய் ஒரு கருமியிடம் பாக்கி நின்றது. வரவேண்டியவர் தவிக்கிறார். "நான் எவருக்கும் பாக்கியில்லையே" என நினைக்கிறார். பாக்கியில்லைஎன்பது உண்மை. ஆனால் மனத்தில் அடுத்த கட்டத்தில் முடிந்தால் என்னிடம் எவரும், எதையும் பெற்றுக் கொள்ள முடியாதுஎன்பதே என்சுபாவம்என்பதை அவர் அறியவில்லை. அறிந்து, 10 நாள் பிரார்த்தனையில் 60,000 ரூபாய் வந்தது.

பிரார்த்தனை மனம் ஏற்காமல் செய்வதுஎன்று அறிந்து 1 வருஷம் கழித்து, 3 நாள் பிரார்த்தனைக்கு மீதிப்பணம் முழுவதும் கேட்காமல் தானே வந்துவிட்டது.

இவை பிறர் நமக்குச் சொல்வதில்லை; சொல்லக்கூடாது.

நமக்கே தெரிய வேண்டும். அதுவே முறை; உண்மை.

இந்தச் சட்டம் சாதிக்காதது உலகில் இல்லை.

ஜோஸ்யர்கட்குச் சட்டம் தெரியாவிட்டாலும் சில சமயங்களில் என்ன செய்ய வேண்டும்எனத் தெரியும்; சொல்லமாட்டார்கள்.

**தெரியாவிட்டாலும் மனம் குறையாக இருப்பதை ஏற்று, குறை நீங்கப் பிரார்த்தனை செய்தால் பிரார்த்தனை பூரணமாகப் பலிக்கும்.**

வீட்டுப் பிரச்சினையிலிருந்து சர்வதேசப் பிரச்சினைகள்வரை இந்தச் சட்டம் தவறாது பலிக்கும். இதைக் கூறும் கதைகள் பல.

**மனம் Sincerity உண்மையை நாட வேண்டும்.**

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நிறைவும் குறைவும் மாறி மாறி வருகின்றன. இது இயற்கையின் வழி. நிறைவிலிருந்து பெருநிறைவுக்கு இயற்கையால் நேரடியாகப் போக முடியாது. நிறைவிலிருந்து குறையை நாடி பிறகே பெருநிறைவுக்குப் போகலாம்.

***நிறையைப் பெருநிறைவாக்கும் முறை.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

கட்டுக்கு மீறிய தீவிரம் திருவுருமாற்றமடைந்தால் அபரிமிதமான சக்தியாகும்.

***சமர்ப்பணம் கட்டுக்கு மீறிய தீவிரத்தை***

***அபரிமிதமான சக்தியாக்கும்.***



# அன்பர் கடிதம்

**அன்னையை அறிந்தபின்:** நான் முதன்முதலில் அன்னையைப் பற்றிய "இதுவரை பலிக்காத பிரார்த்தனைகள் இனி பலிக்கும்" என்ற கட்டுரையை மங்கையர் மலரில் 1996இல் படித்தபின்தான் ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தர் இருவருடைய அருளையும் அவர்களின் சக்தி இயங்கி எப்படி பிரச்சினைகள் தீர்க்கிறது என்பதையும் அறிந்துகொண்டேன். அதுமுதல் பலவித அனுபவங்கள். அவற்றுள் சமீபத்தில் எனக்குக் கிடைத்த இனிய அனுபவத்தை நன்றி கூறிச் சொல்வதன்மூலம் அன்பர்கள் பலரும் அதுபோல் ஸ்ரீ அன்னையின் ஆசியைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் எழுதுகிறேன்.

எனக்கு, தினமும் தியானமையம் சென்று அங்கு ஸ்ரீ அன்னையை வணங்கிவந்தால்தான் அமைதி, இன்பம். அப்படி, தினமும் ஓர் அன்பர் நடத்தும் தியானமையத்திற்குச் செல்கிறேன். எனக்கு தியானமையத்தில் ஏதாவது ஒரு சர்வீஸ் செய்ய மிகவும் ஆசை. ஆகையால் அவர்களை சந்தித்து எனக்கு ஏதாவது சர்வீஸ் கொடுக்கும்படிக் கேட்ட மறுநாளே அவர் என்னை அன்றே, அதாவது 3.5.2005 evening meditation service பார்த்துகொள்ளச் சொன்னார். நானும் மிகவும் மகிழ்ச்சியுடன் அங்கு செல்லும்போதே வானம் இருண்டு அந்த இடத்தில் மழையுடன் தியான மையத்திற்குள் நுழைந்து 'Mother and me' என்று இருக்கும்பொழுது அன்னை அவர்களின் சத்திய மந்திர வார்த்தைகளான "அன்னை ஜீவனோடு இருக்கும் இடம் தியானமையம். மனித மனத்தின் சுமுகம் தியானமையத்தின் ஜீவன். நெஞ்சை நிரப்பும் நிலையம் நிலையான ஜீவனுடையது" என்கின்ற சென்னை மாம்பலம் தியானமைய 10ஆம் ஆண்டு நிறைவு விழாவில் மார்ச் 20, 2005இல் சொன்னது நினைவுவந்தது. இப்பொழுது இது உண்மை என்று நம்புகிறேன், 'Mother' என்று தியானித்து, கண்களை மூடிக்கொண்டு நமஸ்கரித்து, கண்களைத் திறந்து நமஸ்கரித்தபடியே பார்த்தபோது இரண்டு கைகள் என் தலைமேல் நிஜமாகவே தொட்டுக்கொண்டிருப்பதை உணர்ந்தேன். கீழே திருவடிகளில் என் கைகளைப் பதித்து 'யார்' என்று அப்படியே நமஸ்கரித்தபடியே நிமிர்ந்தபோது அந்த கைகள் ஸ்ரீ அன்னையின் மஹாகாளி ரூபத்தில் நன்றாகச் சிரித்தபடி என் தலையில் பதிந்திருப்பதைப் பார்த்து உணர்ந்து

அனுபவித்தேன். நிஜமாகவே நான் பார்த்தது என்னை வியப்பிலாழ்த்திய-தோடு அன்னையின் வார்த்தைகள் எந்த அளவுக்கு சத்தியமானவை. அந்த சத்தியவார்த்தைகளுக்காக ஸ்ரீ அன்னை இந்தச் சாதாரண கருவியாகிய எனக்கும் காட்சி கொடுத்தது மிகவும் அற்புதம். கண்களை கண்ணீர் நனைத்தது. ஒரு நிமிடம் நான் எங்கிருக்கிறேன் என்றே தெரியவில்லை. உணர்வால் நெகிழ்ந்து, உள்ளம் பூரித்து அன்னையின் அந்த சத்திய வார்த்தைகள் ஒளியாகவும் அன்பாகவும் ஆனந்தமாகவும் சக்தியாகவும் (power) மாறி மனம், உள்ளம், நாதம், உடல் என்ற கூறுகளில் இன்பத்தை அனுபவித்தது. எனக்கு அந்த நிமிடம் முதல் 'self existing joy' எப்பொழுதும் இருப்பதை உணர்கிறேன். ஸ்ரீ அன்னை தியானமையத்தில் ஜீவனோடு இருக்கும் அளவிற்கு அந்த தியானமையத்தை நன்றாக நடத்தும் அன்பருக்கும் என் நன்றியைக் கூறுகிறேன். இன்று தமிழக மக்கள் பலரும் ஸ்ரீ அன்னையை அறிந்து, ஸ்ரீ அன்னையை மட்டுமே தெய்வமாக ஏற்றுக் கொண்டு ஸ்ரீ அன்னையை மட்டுமே முழுமையாக நம்பி பயனடைகிறார்கள் என்றால் அதற்கு முழுக்காரணம் மதர்ஸ் சர்வீஸ் சொசைட்டி. அவர்களைப் பற்றி எழுதவேண்டும் என்றால் நாட்கள் போதா, வார்த்தைகள் போதா. அவர்கள்மூலமாக, அதாவது அவர்கள் எழுத்துகள்மூலமாக நானடைந்த அனுபவங்கள் தினம் தினம். இப்படிப்பட்ட வெளியீட்டில் வெளியாகும் எழுத்துகளை ஒவ்வொருவரும் படித்து தமிழ்நாடே, இந்தியாவே, உலகமே பயனடையவேண்டும் என்று எல்லா அன்பர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

வழிபாட்டு முறைகள் எல்லாம் மனிதனைப் பழக்கத்திற்கு உட்படுத்துவது. வாழ்வு, இராணுவப் பயிற்சி, நகர வாழ்வு, வறுமை, காராக்கிருகச் சிறை, அகதிகள் முகாம் மனிதனின் பழக்கங்களை இழக்கச் செய்பவை.

***நாமே முன்வந்து பழக்கங்களை அழிப்பது சரணாகதி.***



# அமெரிக்காவின் முன்னேற்றத்திலிருந்து இந்தியர்களாகிய நாம் அறிந்துகொள்ள வேண்டியது

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

N. அசோகன்

**7. மனிதனுக்கு வரக்கூடிய நெருக்கடிகளும் சவால்களும் அவன் முன்னேற்றத்தை விரைவுபடுத்துகின்றன.**

மனிதனுக்குச் சாதாரணமாகவே விழிப்புணர்வு குறைவு. தானே சொந்தமாக முன்னேறும் ஆர்வத்தால் உந்தப்பட்டு அவன் வாழ்க்கையில் சாதிப்பது மிகவும் குறைவு. இயற்கையும் சமூகமும் வாழ்க்கையும் கொடுக்கும் pressure மற்றும் நெருக்கடிகளின் காரணமாகத்தான் அவன் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவும் முன்னேறவும் முயற்சிகளை எடுக்கின்றான். குளிர்காலத்தில் பயிரிட முடியாது என்ற சிரமம் வருவதால் ஐரோப்பிய நாடுகளில் கோடை காலத்திலேயே வருடம் முழுவதற்கும் வேண்டிய மகசூலை உற்பத்தி செய்துகொள்ள அந்நாட்டு விவசாயிகள் கற்றுக்கொண்டனர். உணவு மட்டுமில்லை, குளிர்காலத்தில் வீட்டை கதகதப்பாக வைத்துக்கொள்வதற்கான விறகு மற்றும் உடம்பை கதகதப்பாக வைத்துக்கொள்வதற்கு வேண்டிய துணிமணிகள் ஆகியவற்றைச் சேகரித்துக்கொள்ளவேண்டிய நெருக்கடி இருந்ததால் ஐரோப்பிய மக்கள் தம்முடைய உற்பத்தித்திறனை விரைவாக உயர்த்திக் கொண்டனர்.

பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் இந்தக் குளிர்கால நெருக்கடி இல்லை என்பதால் இங்குள்ள மக்கள் தம் உற்பத்தித்திறனை பெருக்கிக்கொள்ளாமல் relaxedஆக வாழ்க்கையை நடத்திவந்தனர். ஐரோப்பியர்கள் ஆசிய நாட்டு மக்களைவிட விரைவாக முன்னேறியதற்கு அங்குள்ள குளிர்காலம் ஒரு முக்கிய காரணமென்றால் அது நமக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால்

அதிலொரு பெரியவுண்மை உள்ளது.

போர் என்பது ஒரு பெரிய நெருக்கடி. இதனால் உயிர்ச்சேதம், பொருட்சேதம் மற்றும் பொருளாதாரச் சீர்குலைவு நிகழ்வது வழக்கமாகி விட்டது. ஆனால் இப்படிப்பட்ட சேதம் விளைவிக்கின்ற போரால் மனிதனுடைய முன்னேற்றம் விரைவுபடுகின்றது என்பதும் உண்மை. தேவையில்லாத பழக்கவழக்கங்கள், மனோபாவங்கள் ஆகியவற்றை மனிதன் தானாக விடவேண்டும். அப்படி அவன் தானாக விடாமல் அவற்றை இறுகப் பிடித்துக்கொண்டிருக்கும்பொழுது பலவந்தமாக அவற்றை உடைத்தெறியவும் அவற்றிலிருந்து மனிதனைக் காப்பாற்றவும் இயற்கை வன்முறையை மேற்கொள்கிறது. இப்படி மனிதனைத் திருத்த இயற்கையின் கையில் ஆயுதமாகச் செயல்படும் அம்சம் போருக்கு உண்டு.

ஐரோப்பிய நாடுகள் ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகளை அடிமை நாடுகளாக வைத்திருந்தது முடிவுக்கு வரவேண்டிய காலகட்டம் 1930இல் வந்துவிட்டது. இந்த நாடுகளில் எல்லாம் சுதந்திரவேட்கை வெளிப்பட ஆரம்பித்துவிட்டது. இந்தக் காலகட்டத்தில் ஐரோப்பிய வல்லரசுகள் எல்லாம் தாமாக முன்வந்து இந்த ஆசிய மற்றும் ஆப்பிரிக்க காலனிகளுக்கு விடுதலை கொடுத்திருக்க வேண்டும். ஆனால் அவை அப்படிச் செய்யவில்லை. பிடிவாதமாக விடுதலை அளிக்க மறுத்தன. அதாவது ஏகாதிபத்யம்என்ற வேண்டாத குணவிஷேஷத்தை விட மறுத்துவிட்டன.

தானாக ஐரோப்பா விடமறுத்த குணவிஷேஷத்தையும் பழக்கத்தையும் அவர்களைப் பலவந்தமாக விடவைப்பதற்கு இயற்கை ஒரு நடவடிக்கை எடுத்தது. அதுதான் இரண்டாம் உலகப்போர். இங்கிலாந்து மற்றும் பிரான்சு ஆகிய நேசநாடுகளின் சுதந்திரத்திற்கும் ஜனநாயக உரிமைகளுக்கும் பெரிய ஆபத்து வந்தது. பெரிய போராட்டத்திற்கும் உயிரிழப்பிற்கும் பொருட்சேதத்திற்கும் பின்னர் இந்நாடுகள் தம் சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொண்டன. ஆனால் இரண்டாம் உலகப் போர்என்ற பெரிய நெருக்கடிதான் இந்நாடுகளின் சாம்ராஜ்ய மோகத்தின்



தீவிரத்தையே தளர்த்தின. தங்கள் சுதந்திரத்தை இந்நாடுகள் அரும்பாடுபட்டு பாதுகாத்துக்கொள்ளும் பொழுது, மற்ற நாடுகளை தாமே அடிமைப்படுத்தி வைத்திருப்பது நியாயமில்லைஎன்பது இந்நாடுகளுக்குப் புரிய இரண்டாம் உலகப் போரென்ற பெரிய நெருக்கடி தேவைப்பட்டது.

இந்த இரண்டாம் உலகப்போரென்ற நெருக்கடி வந்திருக்காவிட்டால் இந்தியா, இலங்கை, பர்மா போன்ற ஆசிய நாடுகள் அவ்வளவு சுலபமாக விடுதலை பெற்றிருக்க முடியாது. 1947இல் வந்த சுதந்திரம் மேலும் 20 அல்லது 30 வருடங்கள் கழித்து வந்திருக்கும். அதுவும் ஒரு பெரிய போர் மற்றும் உயிர்ச்சேதத்துடன்தான் வந்திருக்கும். சுதந்திரத்தின் அருமையை மேலைநாடுகளுக்கு உணர்த்தி, அவற்றைத் தாமாகவே ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகளுக்கு விடுதலை அளிக்கவைத்தது இரண்டாம் உலகப்போரென்ற பெரிய நெருக்கடிதான்.

அமெரிக்காவில் 1929-இல் பங்குச்சந்தையில் ஒரு பெரிய சரிவு வந்து பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது. Labour Marketஇல் 30% பேர் வேலை இழந்து, வருமானமின்றி தவித்தார்கள். அதுவரையிலும் அமெரிக்காவில் free market என்ற பாலிசிதான் நிலவியது. அதாவது மார்க்கெட்டில் உள்ள supply and demand ஆகியவிரண்டு மட்டுமே பொருளாதாரச் செயல்பாடுகளை நிர்ணயித்தால் போதும், அரசாங்கத்தின் தலையீடு கூடாதுஎன்பது அக்கொள்கையாகும். 1929-இல் நிகழ்ந்த பொருளாதார வீழ்ச்சி வரையிலும் அமெரிக்க அரசாங்கம் இக்கொள்கையைத்தான் கடைப்பிடித்துவந்தது.

உண்மையில் கட்டுப்பாடில்லாத முதலாளித்துவத்தின் காலகட்டம் 19ஆம் நூற்றாண்டோடு முடிந்துவிட்டது. அரசாங்கத்திற்கு ஒரு social responsibility உண்டு. உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைகளைக் காப்பாற்ற சமுகம் முன்வரவேண்டும்; அரசாங்கம் welfare stateஆக மாறவேண்டும்என்ற கருத்துகளை மார்க்ஸ் போன்ற கம்யூனிஸ புரட்சிச் சிந்தனையாளர்கள் 19-ஆம் நூற்றாண்டின் இடையிலே வெளியிட்டுவிட்டார்கள். இருந்தாலும் பல மேலைநாட்டு அரசாங்கங்கள் இவ்விஷயத்-

தில் எந்த விழிப்புணர்வுமில்லாமல் free market கொள்கைகளையே கடைப்பிடித்துக்கொண்டிருந்தன. அப்படிச் செயல்பட்ட நாடுகளில் அமெரிக்காவுமொன்று.

30% labour forceற்கு வேலை போய்விட்டது. தொழிற்சாலைகள் முடங்கிக்கிடக்கின்றன. வங்கிகள் திவாலாகிக்கொண்டிருக்கின்றன. விதவைகளும் முதியவர்களும் ஆதரவின்றிப் பட்டினியால் வாடுகின்றனர் என்ற நிலை உருவாகியதும், அரசாங்கம் இனிமேல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது; பொருளாதாரத்தைச் சீர்படுத்தத் தலையிட வேண்டும்என்ற கோரிக்கை எழுந்தது.

1933-இல் அமெரிக்க அதிபராக பதவியேற்ற F.D. Roosevelt அவர்கள்தாம் இக்கோரிக்கைக்கு response தரும்வகையில் New Deal என்றவொரு புதிய பொருளாதாரச் சீர்திருத்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தார். வேலையிழந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதற்காகச் சாலை போடுவது, பாலம் கட்டுவது, புதிய கட்டிடங்கள் கட்டுவது போன்ற திட்டங்களைத் துவக்கிவைத்தார். தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு 8 hours working time கொண்டுவந்தார். முதியவர்களுக்கும் விதவைகளுக்கும் ஓய்வூதியம் மற்றும் நிவாரணத்தொகை அளித்தார். வங்கிகள் திவாலாவதைத் தடுக்க பொதுமக்களை தங்கள் சேமிப்பை மீண்டும் வங்கிகளில் டெபாசிட்டாகப் போடச்சொன்னார்.

அரசாங்கத்திற்கு social responsibility உண்டென்ற socialist கொள்கையை தைரியமாக ஏற்று நடைமுறையில் அமல்படுத்திய முதல் அமெரிக்க அதிபர் இவர்தான். இந்தப் பொருளாதார வீழ்ச்சிஎன்ற பெரிய நெருக்கடி வந்திருக்காவிட்டால் அமெரிக்க அரசிற்கு இப்படிப்பட்ட socialist விழிப்புணர்வு சமூகத்தில் தோன்றிவிட்டாலும் அரசாங்கங்கள் இப்படிப் பொருளாதார நெருக்கடி வாராமல் இவ்விழிப்புணர்வை ஏற்றுக் கொள்வதில்லை.

World Trade Centre பயங்கரவாதிகளின் தாக்குதலால் தரைமட்டமான பின்னர்தான் அமெரிக்க அரசு பயங்கரவாதம் எவ்வளவு பெரிய ஆபத்தைத் தனக்கு கொண்டுவருமென்பதையே உணர்ந்தது. அதுவரையிலும் தன் இராணுவ பலத்தையே பெரிதாக நம்பிக்கொண்டிருந்த அமெரிக்கா தன்னை யாரும் அசைக்க முடியாதுஎன்ற ஆணவத்தில் பயமே இல்லாமல் விழிப்புணர்வின்றி அசிரத்தையாக இருந்தது. அல் குவைதா தாக்குதலுக்கு அப்புறம்தான் தன்னுடைய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறைவு; அவற்றைப் பலப்படுத்தவேண்டுமென்ற விழிப்புணர்வே அந்நாட்டிற்கு வந்துள்ளது.



பெட்ரோலிய பொருட்களை அளவிற்குமீறி பயன்படுத்துவதால் காற்று மண்டலத்தில் கரியமிலவாயு (carbon dioxide) அதிகம் கலக்கிறது. அதனால் காற்றுமண்டலத்தில் வெப்பம் அதிகரித்து கடல்நீரின் வெப்பமும் அதிகரிக்கிறது என்றும், இது தொடர்ந்தால் சூறாவளிகளின் தாக்குதலும் வலுவடையும் என்று விஞ்ஞானிகள் பலவாண்டுகளாக அமெரிக்க அரசை எச்சரித்துவந்துள்ளனர். ஆனால் அரசாங்கம் அதைப் பொருட்படுத்தவே இல்லை. அண்மையில் Katrina என்று பெயர் சூட்டப்பட்ட சூறாவளி Florida மற்றும் Louisiana மாநிலங்களைத் தாக்கிப் பெருஞ்சேதம் விளைவித்தது. இந்தப் பெருஞ்சேதத்தைக் கண்டபின்னர்தான் அமெரிக்க அரசிற்கு விழிப்புணர்வு வந்துள்ளது. கரியமிலவாயு காற்றில் கலப்பதை குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்குமென்று எதிர்பார்க்கலாம்.

தொடரும்.....

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஜீவாத்மா சித்திக்கும்வரை ஆர்வமோ, தியாகமோ பின்பற்ற முடியும்; சரணாகதியை ஆரம்பிக்க முடியாது. ஜீவாத்மா பரமாத்மாவுக்குச் சரணடைய வேண்டும் என்பதால், சரணாகதியை ஆரம்பிக்க ஜீவாத்மா நமக்குச் சித்திக்க வேண்டும்.

***சரணாகதி ஜீவன் முக்தனுக்குரியது.***

**Needless to say that those who aspire to Truth must abstain from telling lies.**

**சத்தியத்தை நாடுபவர் பொய் சொல்லக்கூடாது என்பது தெளிவு.**

- ✡ இலட்சியம் பெரியதானால் உலகம் அறியும், போற்றிப் புகழும்; பின்பற்றாது.
- ✡ ஏசு கொண்டுவந்த அன்பானாலும் புத்தர் அளித்த ஞானமானாலும் சங்கரருடைய மாயை எனினும் கிருஷ்ண பரமாத்மாவின் யுகதர்மமானாலும் பொதுமக்களுக்கு அன்றாட வாழ்வில் பின்பற்ற அவர்கட்கு ஏற்ப மாற்றி அமைத்துக்கொள்வது அவசியம்.
  - ❀ இலட்சியத்தைக் கூற கதை அவசியம்.

    சத்தியத்தின் உயர்வை அரிச்சந்திரன் கதை கூறும்.

    காலில் குறையின்றி அழுக்குப் போகும்படிக் கழுவாவிட்டால் அந்தப் பொக்கை வழியாக சனியன் உள்ளே வருவான் என்பதை அனைவரும் அறிவர். அதையே இலட்சியமாகக் கூறியிருந்தால் நளமகராஜன் கதை நாட்டில் பரவியதுபோல் கருத்து பரவியிருக்காது.
  - ❀ பொய் சொன்னபின் அங்கு சத்தியமிருக்காது என்ற இலட்சியத்தை எப்படி எடுத்துக்கூறலாம்?

    உதாரணம்மூலம் கூறும்பொழுது புரிந்துகொள்வது அறிவு - மனம்.

    ஊரில் முக்கியஸ்தர் செய்வதைப் பின்பற்றுவது உணர்ச்சி - Vital - பிராணன்.

    எழுத, படிக்க, தலைவார, பல்விளக்க குழந்தைக்குக் கற்றுக்கொடுப்பது உடல் பெறும் பயிற்சி. சொல்லான கதைமூலமோ, மற்றவர் செய்வதைப் பார்த்துப் பின்பற்றுவதோ குழந்தைக்குப் பயன்படாது. பயிற்சி தேவை. பயிற்சி உடலுக்குத் தேவை.

- ❀ உலகம் சத்தியத்தை மேற்கொண்டால் சத்தியஜீவியம் வருவது சீக்கிரமாக முடியும்.
- ❀ இந்திய எழுத்தாளர் இங்கிலாந்து கோர்ட்டில் பொய் சொன்னதால் 4 ஆண்டு சிறைத்தண்டனை பெற்றார். சட்டப்படி கோர்ட்டில் சொல்லும் பொய்க்கு அமெரிக்காவில் 20 ஆண்டுவரை சிறைவாசம் தரலாம்.

  மேல்நாட்டார் பொய் சொல்வதில்லை. நாம் 98 பங்கு பொய் சொன்னால் அவர்கள் 2 பங்கு சொல்வதால் தண்டனை பொய் சொல்வதைத் தடுக்கும். நம் நாட்டில் தண்டிக்க முடியாது. தண்டனை கொடுத்தால் ஜெயிலில் இடமிருக்காது. வக்கீலும் ஜட்ஜும் உள்ளேயிருப்பர். சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதி தம் வயதைக் கூறுவதில் பொய் சொல்லிவிட்டார்எனில் நிலைமை விளங்கும்.

  தண்டனை அளித்துத் தவற்றைத் தடுக்கவும் மக்கள் பெருமளவு சத்தியத்தைத் தாங்களே மேற்கொண்டிருக்க வேண்டும்.

தானே விரும்பி நாடாததை தமக்கு அளிக்கும் திறன்
ஆண்டவன் உட்பட எவருக்கும் இல்லை.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

புதுமை உணர்வு, உற்சாகம், ஆச்சரியம், மின்னலான ஜோதி ஆகியவை அடிக்கடி சூட்சுமத்தில் ஏற்படும்; எளிதாகவும் நிகழும். ஜடவாழ்வில் அரிது.

***புதுமையும், புத்துணர்வும், மின்னல் ஜோதியும் சூட்சுமத்திற்குரியன; ஜடத்திற்கன்று.***

# மலரும் மணமும்

மகேஸ்வரி

## செல்வ வளம்

ஹாங்! ஹாங்! ஹாங்!

"ஓம் தத் சவித்துர் வரம் ரூபம்
ஜோதிஹ் பரஸ்ய தீமஹி
யந்நக சத்யேன தீபயேத்"

மந்திரத்தின் இனிமையினுள் தன்னை இழந்து காலத்தை மறந்து மிதந்துகொண்டிருந்தார் ராஜாமணி. இசை நின்றவுடன் தான் இருக்கின்ற இடம் நினைவிற்கு வந்தவுடன் மீண்டும் ஹாரனை அழுத்தலாமாஎன்று யோசித்தார்.

இந்த காயாம்பூவை எங்கே காணோம்? எப்பொழுதுப் பார்த்தாலும் கேட்டில் இருக்கமாட்டான். அவன் மனதில் என்னதான் நினைத்துக் கொண்டு இருக்கின்றானோ? தெரியவில்லை. கேர்டேக்கர்ஆனாலும் எதையும் கேர் செய்வதில்லை. வரவர எல்லோரும் அவனுக்கு கொடுக்கின்ற இடத்தால் பொறுப்பில்லாமல் இருக்கின்றான். அவனை.... சரி, சரி அவனுக்கென்ன 50 ஜோடி கால்களா இருக்கின்றன! மேலும் நினைத்தவுடன்/கூப்பிட்டவுடன் வருவதற்கு அவனென்ன பரமாத்மாவா? எந்த ஃபிளாட்டில் இருக்கின்றானோ? யார் வேலையைச் செய்து கொண்டிருக்கிறானோ? மனத்திற்குள் சொல்லிக்கொண்டே காரின் கதவைத் திறந்தார்.



கேட் திறக்கப்பட,

"என்னப்பா காயாம்பூ, நான் பத்து நிமிடமாக வெளியில் நின்று கொண்டிருக்கிறேன். காலையிலேயே வெயில் உச்சிக்கு வந்துவிட்டது. நீ என்னடாவென்றால் தூங்கி எழுந்திருக்கின்றாயா?"

"இல்லை சார். நம் 4ஆம் நம்பருக்கு ஒருவர் புதிதாக குடி வரப் போகின்றார். சாமான்கள் எல்லாம் வந்து இருந்தன. அதுதான் மேலே போய் பார்த்து வரப் போனேன். அந்த வீடே ஏதோ பூலோகச் சொர்க்கம் மாதிரி இருக்கின்றது. நேற்று பார்த்த வீடு மாதிரி இல்லை. ஏதோ புதியதாகக் கட்டியதுபோல இருக்கின்றது. முன்பு மரிக்கொழுந்தம்மா இருந்தாங்களே, அதே வீடுதான். அவர்கள்தான் இவர்களுக்கு வீட்டை விற்றுவிட்டுப் பிள்ளையுடன் ஆஸ்திரேலியாவுக்குப் போய்விட்டார்கள். அப்பொழுது அது வீடுமாதிரியா இருக்கும். 12 நாய், 25 பூனைகள். கதவைத் தட்டவேண்டும் என்றாலே பயமாக இருக்கும். இப்பொழுது இதே வீட்டில் பக்தி நறுமணம் வீசுகின்றது. நேற்று சாயந்திரம் வீட்டுக்காரர் மட்டும்தான் வந்திருந்தார். என்ன மாயம் செய்தாரோ, காலையில் போய் பார்த்தால், வீடெல்லாம், சுவரெல்லாம் மணக்கிறது. சூரியனுக்கும் இவர்கள் வீட்டிற்கும் ஏதோ நேரடியாக கனெக்ஷன் கொடுத்திருப்பாரோ என்னவோ போங்கள் ராஜாமணி சார், லைட் போடாமலேயே பளிச்சென்று இருக்கின்றது. எனக்கென்னவோ அந்த அம்மாதான் சூரியன் என்று நினைக்கின்றேன். ஆனால் பூலோகச் சூரியனாயிற்றே அதனால் சுளீரென்று இருக்கவில்லை. வெளிச்சம் மட்டும்தான் இருக்கின்றது. நீங்கள் போய் பாருங்கள் சார்".

"காயாம்பூ, என்னை என்ன உன்னைப்போல் புதிதாக யாராவது வந்தால் போய் பார்த்து, ஹலோ குட்மார்னிங் சார் சொல்வேன் என்று நினைத்தாயா?"

"அப்படியெல்லாம் இல்லை சார். நீங்கள் வேண்டுமானால் பாருங்கள். உங்கள் வீட்டுக்குப் போகும் வழியில்தானே இருக்கின்றது, நாலாம் நம்பர். உங்கள் கால் தானாக அங்கே நிற்கின்றதா இல்லையா என்பதைப் பாருங்களேன்".

“சரி, சரி நேரமாகிறது. இன்றைக்கு ஞாயிற்றுகிழமையென்றாலும் தலைக்கு மேலே வேலை இருக்கின்றது. ஆளை விடப்பா” பேசிக்கொண்டே நகர்ந்த ராஜாமணி இந்த காயாம்பூ சொல்வதைப் பார்த்தால் புதிதாக வந்தவர்கள் மனிதர்கள்தாமா? இந்த காயாம்பூ சொன்னால் சரியாகத் தான் இருக்கும். காயாம்பூ கதை எழுதலாம், அந்த அளவிற்கு அவனுக்குக் கற்பனை வளம் இருக்கின்றது. ஏதோ கோர்டேக்கராக இங்கே இருக்கின்றான். அவனுக்கு இருக்கும் திறமைக்கு இதைவிடப் பெரிய வேலைக்குப் போகலாம். ஏதோ இந்த “ரோஜா அபார்ட்மெண்ட்ஸ்” பேரில் பிரியம் அதிகம். இவனை எல்லோரும் தங்கள் குடும்பத்தில் ஒருவனாகத் தானே இங்கு இருக்கும் 10 குடும்பங்களும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. எந்த பண்டிகை வந்தாலும் அவனுக்கு ஒரு புது டிரஸ் உண்டே. சில சமயம் பார்த்தால் நம் வீட்டில் இருப்பவர்களைவிட இவனுக்கு அதிகம் டிரஸ் கிடைக்கும். பாவம், கள்ளங்கபடு இல்லாதவன். எள் என்றால் எண்ணெயாக இருப்பவன். இராத்திரி 12 மணியானாலும் சரி, ‘காயாம்பூ’ என்று கூப்பிட்டால் எந்த வீட்டிலிருந்து யார் கூப்பிடுகின்றார்கள் என்பதைத் தெரிந்து டாணென்று ஆஜராகிவிடுவான். நல்ல பையன். இந்தக் காலத்தில் இப்படிப்பட்ட பையன் கிடைப்பதற்கு இந்த அபார்ட்மெண்ட்டில் இருப்பவர்கள் எல்லோரும் கொடுத்துவைத்திருக்க வேண்டும். இப்பொழுது புதிதாக வந்திருப்பவர்களாவது நன்றாகப் பழக வேண்டும். 10 குடும்பங்கள் இருந்து ஒரு அசோசியேஷன் மீட்டிங் போட்டால் 2 பேர்கள்கூட வரமாட்டார்கள். எல்லோருமே வீட்டை விலை கொடுத்து வாங்கிவிட்டதால் எல்லாமே தங்களுக்குச் சொந்தம் ஆகிவிட்டதைப்போல் பேசுவார்கள். சண்டை சச்சரவுஎன்று ஒன்றுமில்லை. ஆனால் அடுத்த வீட்டில் இருப்பவரின் பெயர் கீழேயுள்ள போர்டில் இருப்பதால் தெரிந்துகொண்டு இருப்பார்களேதவிர, வீட்டில் உள்ளவர்களைப் பற்றி எதுவுமே தெரியாது. தனித்தனித் தீவைப்போல்தான் வாழ்ந்துகொண்டு இருக்கின்றார்கள். முகம் தெரியாத அன்னிய வாழ்க்கை. அந்தக் காலத்தில் பிரிட்டிஷ்காரர்கள் இங்கு வந்தபொழுது மூலைக்கொருவராய் இருந்தவர்களையெல்லாம் சேர்த்து, ஒன்றாகச் சேர்த்துவிட்டு நம் சுதந்திரத்தைப் பறித்தார்களாம். இங்கிருப்பவர்களை எல்லாம் ஒன்றாக்கக்கூடிய சக்தி ஏதும் இங்கே



வந்தால் எப்படியிருக்கும்? ஏதேதோ நினைத்துக்கொண்டே நாலாம் நம்பர் அருகில் வந்தார். உள்ளிருந்து அலைஅலையாக ஏதோவொன்று அவருக்குள் நுழைவதை உணர்ந்தார். கலைஞனல்லவா, பார்த்துப் புரிந்து கொள்வதைவிட உணர்ந்து தெரிந்துகொள்வதுதான் அதிகம். அதனாலேயே அவருக்கு தம்மையும் அறியாமல் தம்முள்ளே ஒன்று புகுந்ததை நன்றாகவே உணர முடிந்தது. ஆனாலும் கதவைத் தட்ட மனமில்லை. காலிங்பெல்லருகே சென்ற கை அதைத் தொடாமலேயே நின்றுவிட்டது. நாகரீகம் எத்தனையோ நல்ல விஷயங்களைக் கற்றுக்கொடுத்திருக்கிறது. ஆனால் இதைப்போல் ஓரிரு விஷயங்களில் தனக்குரிய நல்லதைக்கூட ஏற்றுக்கொள்ள இயலாத நிலையையும் ஏற்படுத்துகிறது. மற்றவர் வீட்டிற்குள் எப்படித் தானாகவே அறிமுகம் இல்லாமல் செல்வது என்ற “பழக்கத்தால்” தம்முடைய உணர்வு அனுபவிக்கின்ற அனுபவத்தை மேலும் அதிகமாக்கக்கூடிய சக்தி அங்கிருக்கிறதுஎன்பதைப் புரிந்துகொள்ளாமல், எதையுமே செய்யத் தோன்றாமல் நின்ற ராஜாமணி தன்னையும் அறியாமல் ஏதோ மெஸ்மரிசத்தால் இயக்கப்பட்டவனைப்போல் அடிமேல் அடி வைத்து மேலே ஏறினான். மாயநாதன் என்ற பெயர் மட்டும் அவன் கம்ப்யூட்டருக்குள் நுழைந்துவிட்டது அவன் feed செய்யாமலேயே.

“ரோஜா, உன் பெயரும் நம் அபார்ட்மெண்ட் பெயரும் ஒன்றாக இருக்கும் பொருத்தத்தை என்னவென்று சொல்வது? யாருக்குத்தான் தெரியும், இந்த ரோஜாவில் நாம் வீடு வாங்க போகிறோமென்று. உன் முகம்தானே இது. புது வீட்டிற்கு வந்தபிறகு புது முகமும் பிறந்துவிடுமா? சந்தோஷம் பொங்கி வழிகிறாற்போல் இருக்கின்றதே. நான் விஷயத்தைச் சொல்லாமலே உனக்குத் தெரிந்துவிட்டதா? அன்னையின் அறையிலிருந்து வருகின்றாய் அல்லவா, அதனால் அன்னைதான் இதையும் சொல்லியிருக்க வேண்டும். இந்த அதிசயத்தைப் பாரேன்டி. எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. சூழலுக்கு எப்பொழுதுமே சக்தி அதிகம் என்று எனக்குத் தெரியும். ஆனால் பாரேன் ஒரு கூடை நிறைய நாகலிங்கப்பூ கிடைத்திருக்கின்றதே. முன்பு இருந்த வீட்டில் ஒரு பூ வேண்டுமானால்

கூட அன்னையிடம் பத்து நாள் பிரார்த்தனை செய்தால் ஒரு பூக்காரி வந்து ஒரு முழம் மல்லிகைப்பூ கொண்டுவந்து கொடுத்துவிட்டு 10 ரூபாய் கேட்பாள். அன்னையை ஏற்றுக்கொண்ட பிறகும்கூட எனக்குப் பூ வைத்து வணங்கக்கூடிய பாக்கியமே இல்லையா என்று தினமும் கேட்பேன். இன்று அன்னையே நேரில் வந்து நிற்பதைப் போல் நான் உணர்ந்தேன். ஒவ்வொரு பூவும் எவ்வளவு பெரியதாக இருக்கின்றது. இது மாதிரி நான் பார்த்ததேயில்லை. சிவப்பு கலந்த நாகலிங்கப்பூதான் பார்த்திருக்கின்றேன். ஆனால் இது வெள்ளை கலந்த பூவாக இருக்-கின்றது. அதுவும் ஒரு பூ இல்லை, ஒரு கூடை நிறைய. மணம் எப்படி வீசுகின்றது பார்த்தாயா?"

கணவன் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்த ரோஜா தான் அறையில் இதுவரை அனுபவித்துக்கொண்டேயிருந்த அன்னையின் சந்தோஷத்தைத் தன் கணவன் முகத்திலும் பார்த்தாள். அவள் நெஞ்சம் வெடித்துவிடும் போலிருந்தது. காஸ் அடைத்த பலூன்போல உயர உயரப் பறந்துகொண்டேயிருந்தாள். ஏதோவோர் அற்புத உலகில் சுகமாகச் சஞ்சாரம் செய்துகொண்டிருக்கையில் சட்டென்று ஒரு சொட்டுத் தண்ணீர் விட்டுப் பொங்கி வந்துகொண்டிருந்த பாலைத் தடுப்பதுபோல், கணவரின் வார்த்தைகள் கீழே கொண்டுவந்தன. மானிடருக்குக் கிடைக்காத சுகத்தை அனுபவித்துகொண்டிருக்கும்பொழுது, 'மானிடா, இது உனக்கு சாஸ்வதமா?' என்று கேலியாக ஏதோவொன்று கேட்க, அவளின் கணவன் ரோஜா என்று அழைக்கவும் சரியாக இருந்தது. வயிறு மட்டும் அல்லாமல் உடம்பு முழுவதையுமே தேனால் நிரப்பிக் கொண்டுவிட்டு மயங்கித் தயங்கி நின்ற வண்டைப்போல் ரோஜா எல்லையில்லா சந்தோஷத்தால் தன்னை நிரப்பிக்கொண்டிருந்தாள்.

கண்ணுக்கு நேராக நீட்டப்பட்ட நாகலிங்கப்பூக் கூடையைப் பார்த்த கண்கள் இமைக்காமல் நிற்க,

"பார்த்தாயா, உன் கண் அப்படியே நின்றுவிட்டதே".

'எனக்கு உடம்பே வெடித்துவிடும்போல் இருக்கின்றதே. கண் மட்டுமென்ன? அதிலுள்ள ஒன்றுதானே!' ரோஜாவின் மனம் கேட்காத கேள்வியது.

கண்கள் மெதுவாக மேலே எழுந்து,

பூவைப் பார்க்க,

"இதெல்லாம் அன்னைதான் நடத்திவைக்க முடியும் இல்லையா? தன்னலமற்ற செல்வவளமாயிற்றே. இந்த இயற்கைக்கு எத்தனை முன்யோசனையிருக்கிறது தெரியுமா? நறுமணத்தை வைத்துதான் இப்பூவினைக் கண்டுபிடிக்க முடியுமாம். சிவனுக்குரிய பூ. ஏன் சிவனே தன் உருவத்தை இதில் வைத்திருக்கின்றான். அவனின் லிங்க வடிவம்தான் இந்த நாகலிங்கப்பூ. சிவனுக்கு அழிக்கும் தொழிலை கொடுத்ததாகப் புராணத்தில் படித்திருக்கின்றேன். ஆனால் அன்னையோ இப்பூவிற்குச் செல்வவளம்என்று பெயரிட்டிருக்கின்றார்கள். எதனை மனதில் கொண்டு இவ்வாறு பெயரிட்டிருக்கின்றார்கள் என்று தெரியவில்லை".

கணவரின் பேச்சு மீண்டும் ரோஜாவை அவளுடைய உலகுக்கே அழைத்துச் சென்றது. கண்கள் திறந்தபடியிருக்க கையிலுள்ள மலரைக் கைகள் பிடித்துக்கொண்டிருக்க, உடல் சோபாவில் உட்கார்ந்திருக்க, அவள் மனது முழுவதும் ஆனந்தலோகத்தில் வலம்வந்து கொண்டிருந்தது.

"உன்னால் பேசக்கூட முடியவில்லையே. இதுதான் அன்னை. நினைத்துப் பார்க்க இயலாத ஒன்றை இந்த அன்னையால் மட்டும்தான் கொடுக்க முடியும். என்னதான் இருந்தாலும் அன்னை அன்னைதான். எவ்வளவோ பணச் சிரமத்திற்கு இடையே இந்த வீட்டை அவர்தானே வாங்கிக் கொடுத்திருக்கின்றார். நான்தான் நினைத்தேனா எனக்கொரு சொந்த வீடு கிடைக்குமென்று. வாங்குகின்ற சம்பளம் கண்ணாமூச்சி போல் ஓடிஓடி மறைந்துகொண்டேதானே இருக்கின்றது. எனக்கு இந்த musical chair ஞாபகம் ஒவ்வொரு முதல் தேதியன்று வரும். முந்தி கொண்டால் உண்டு. இந்த மாதத்தில் எது எது முந்திகொள்ளப் போகின்றதோ என்று நினைப்பேன். தானாகவே சிரிப்பு வந்துவிடும்".

“ரோஜா, இந்த நேரத்தில் என்ன செய்துகொண்டிருக்கிறாய்?”

“ஒன்றுமில்லை. இங்கே ஒரு பூக்கூடையை வைத்துக்கொண்டிருக்கிறேன். இன்றைக்கு நீங்கள் கொண்டுவந்த பூவை இதில் வைக்கப் போகிறேன். ஏதோ எனக்குத் தெரிந்தவகையில் இங்குள்ளவர்களுக்கு அன்னையை அறிமுகம் செய்யலாம்என்ற எண்ணம் திடீரென்று தோன்றியது. எத்தனைப் பேர்களுக்கு அன்னை தம்மருளைக் கொடுப்பதற்குத் தீர்மானம் செய்திருக்கின்றார்கள்என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அன்னை இந்த ரோஜா அபார்ட்மெண்ட்ஸ்ஸை நிச்சயமாகத் தம்முடைய அபார்ட்மெண்ட்ஸ்ஸாக மாற்றுவார், எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஏனென்றால், நாம் முதலில் வந்தவுடன் நமக்குக் கிடைத்திருப்பது நாக லிங்கப்பூ. செல்வவளத்தை நமக்கு மட்டும் தருவதற்கு வரவில்லை. இங்குள்ள அனைவருக்கும் தருவதற்காகத்தான் தன்னலமற்ற செல்வத்தை உங்கள்மூலமாக இங்கு கொண்டுவந்திருக்கின்றார். நமக்கு மட்டும் தருவதென்றால் இளஞ்சிவப்புள்ள நாகலிங்கமலரை அன்னை தந்திருக்கலாம். ஆனால் அப்படியில்லாமல் அவரின் விசேஷத்தன்மையைக் கொண்ட வெண்மை கலந்த நாகலிங்க மலரைத் தந்திருப்பதன் மூலமாக நிச்சயமாகத் தம் முத்திரையைப் பதிக்கத் தீர்மானம் செய்துவிட்டார். அதனால்தான் இப்பூவை இங்கு வைத்திருக்கின்றேன். இதைப் பார்ப்பவர்களுக்கு ஏதோ ஓர் அளவில் செல்வம் கிடைக்கப்போகின்றது. தன்னிலை (conscious) உணர்ந்தவர்களாக இருந்தால், நிச்சயமாக உள்ளே வந்து விசாரிப்பார்கள். அல்லது என்ன பூ இது என்று யோசிப்பார்கள். எப்படியோ ஒரு விதத்தில் அன்னையின் வட்டத்திற்குள் வருவதற்கு பிரியப்படுவார்கள்”.

“உன் யோசனை நன்றாக இருக்கிறதே. நமக்குத் தெரிந்தவர்கள் யாரும் இம்மாதிரி செய்ததில்லையே!”

“யாராவது செய்திருந்தால் மட்டுமே செய்பவர்கள் பிறரைப் பின்பற்றுபவர்கள். தானாக மனதில் உதித்ததை உடனடியாக ஏற்றுச் செய்பவர்கள் முன்னோடிகள். அன்னை என்றுமே முன்னோடிகளைப் பாராட்டுபவர். இதைப் பார்த்து எத்தனை பேர் என்ன செய்யப் போகிறார்கள்? சிலர்



ரசிப்பார்கள். ஆனால் எதையும் செய்வதற்கு ஒரு மனநிலை வேண்டும். அந்த மனநிலை உடையவர்கள் எப்பொழுதுமே எதையாவது புதிதாகச் செய்துகொண்டிருப்பார்கள். உற்சாகமாக இருப்பார்கள்”.

“கீழே பேரையும் எழுதி வைக்கலாமா?”

“முதலில் பூவை மட்டும் வைப்போம். பின் தானாகவே பூவே தன் பெயரை அறிவித்துவிடும்”.

* * *

‘காலையில் பேப்பர் எடுக்க மூன்று மாடி இறங்கவேண்டும். இந்த லிப்ட் வேலை செய்யவில்லை. நல்ல exercise, முன்னாலேயே உடம்பு ஓமக்குச்சியைப்போல் இருக்கிறது. மூன்று மாடி ஏறி இறங்கி பேப்பர், பால் எடுத்துகொண்டுவந்தால்தான் காபி என்றால் பேசாமல் காபி குடிக்காமலே இருந்துவிடலாம். இந்த காயாம்பூவைக் காணோம். அவன் இருந்தால், காலையில் எழுந்தவுடனேயே காபி சாப்பிட்டுவிடலாம். இன்றைக்கு எல்லாமும் சேர்ந்துவிட்டது’, மனத்திற்குள் நினைத்து கொண்டே கீழிறங்கினான், மூன்றாவது மாடியிலிருக்கும் மாறன். கம்ப்யூட்டர் இன்ஜீனியர். அப்பா தன் வேலையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டு, கிராமத்தில்தான் இருப்பேன் என்ற பிடிவாதத்தில், விக்கிரமசிங்கபுரத்தில் தம் சொந்த ஊரில், தம் தாத்தா விட்டுச்சென்ற வீட்டில்தான் இருப்பேன் என்று இருக்கிறார். அம்மாவோ, தம் கணவன் இருக்கும் இடம்தான் தமக்கு சொர்க்கம், கலியுக கண்ணகியாகத்தான் இருப்பேன் என்றெல்லாம் கூறி, அவரைவிட்டு வாராமல், பிள்ளை எப்படி கஷ்டப்பட்டாலும் சரியென்று இருப்பதால் மாறன் தானே தன் சொந்தக் காலில் நிற்பதுடன், தன் சொந்தக்கையால் இன்ஸ்டன்ட் சாப்பாட்டை சாப்பிட்டுக்கொண்டிருக்கிறான். கவலையில்லாத வாழ்க்கை. கை நிறைய சம்பளம். கேட்பதற்கு ஆளில்லாததால் தன் இஷ்டத்திற்கு வருவான் வேலையிலிருந்து. சில நாட்கள் ஆபீசிலேயே குடியிருந்தும்விடுவான். தானுண்டு, தன் வேலையுண்டு என்று இருப்பவன். தன் சுயசம்பாத்தியத்தில் வேலைக்குச் சேர்ந்தவுடன் வீட்டை வாங்கவேண்டும் என்று

வீட்டை வாங்கிவிட்டான். ஆனால் பெண்ணென்றால் அலர்ஜி. அதனால் கல்யாணம் செய்துகொள்ளாமல், இரட்டை படுக்கையறை கொண்ட வீட்டில் ஒற்றைப் படுக்கையில் காலந்தள்ளிகொண்டிருப்பவன். அம்மா வந்தால் எப்படியிருக்கும் என்ற கற்பனையிலேயே நிறைய விஷயங்கள் அனுபவித்துக்கொண்டு, நிஜவாழ்க்கையில் அது எப்படி நடக்கும் என்பதற்கு வழி தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கிறான். அவனவன் அப்பா, அம்மாவை எந்த ஹோமில் சேர்க்கலாம்என்று கேட்டுக் கொண்டிருக்கையில் இவன்மட்டும் சற்று வித்தியாசமாக, அவர்கள் இருவரும் தன்னுடன் வந்து சேர்ந்திருக்க யார் வழிகாட்டுவார்கள் என்று வழிமேல் விழி வைத்துப் பார்த்துக்கொண்டிருக்கிறான். வாழ்க்கையில் எல்லாமும் கிடைத்திருக்க இதுமட்டும் ஏன் நடக்கவில்லை என்ற கேள்வியைத் தினமும் கேட்டுக்கொண்டு, என் கையால் எத்தனை நாட்களுக்குத்தான் சாப்பிடவேண்டிய தலையெழுத்து எனக்கிருக்கிறதோ என்று புலம்பிகொண்டே கீழிறங்கினான். தூக்கக்கலக்கம், முதல் மாடியில் காலை வைத்தவுடன் ஏதோ நறுமணம் ஒன்று அவனைத் தட்டி எழுப்பியது. இருந்தாலும் அதைப் புறக்கணித்துவிட்டு இறங்க ஆரம்பிக்கையில், காயாம்பூ, "என்ன சார், நானே எடுத்துக்கொண்டு வர மாட்டேனா? ஏன் இந்த நேரத்திலே நீங்கள் வந்தீர்கள்? நேற்று விடியற்காலை 4 மணிவரை உங்கள் வீட்டில் ட்யூப்லைட் எரிந்து கொண்டிருந்தது. சரி காலையில் லேட்டாக எழுந்திருப்பீர்களோஎன நினைத்தேன். ஆனால் நீங்கள் வழக்கம்போல் ஆறரை மணிக்கு எழுந்துவிட்டீர்கள்போலிருக்கிறதே''.

"ஆமாம், பிரிட்ஜில் வேறு பாலில்லை. இன்றைக்குப்பார்த்து காபி சாப்பிடவேண்டும் என்று தோன்றியது. அதனால்தான் நானே கீழிறங்கி வந்தேன்''.

"ஆமாம் காயாம்பூ, நேற்று முழுக்க உன்னைப் பார்க்கவே முடிய-வில்லையே, என்னவாயிற்று? லீவு எடுத்துக்கொண்டுவிட்டாயோ என்று நினைத்தேன். என்னப்பா இங்கே புதுவாசனை வருகிறது?" "சார், அது வாசனையில்லை, நறுமணம்". "ஏதாவது பெர்ப்யூம் கம்பெனியில் வேலைக்கு சேரலாம் என்று பார்க்கிறாயா? வாசனை என்று சொன்னால் நறுமணம் என்று சொல்கிறாயே!" "இல்லை சார், இங்கு ஒருவர் புதிதாக வீடு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார். அந்த வீட்டம்மாதான் ஏதோ சுவரில் பூக்கூடை வைத்து பூவை வைத்திருக்கிறார்கள். அதிலிருந்துதான் நல்ல வாசனை வருகிறது. அதைத்தான் நறுமணம் என்று சொன்னேன்''. "இந்தப் பக்கம் வந்தாலே வயிறெல்லாம் குமட்டும். இப்பொழுதென்னடா-வென்றால் நறுமணம் வீசுகிறது. இதன் இரகஸ்யம் என்னப்பா? சரிப்பா, என் பால் பாக்கெட்டை கொடு. உன் கதையை அப்புறம் கேட்டுக் கொள்கிறேன். மேலே வா, காபி சாப்பிட்டுப் போகலாம்". "இருக்கட்டும் இப்பொழுதுதான் முல்லையம்மா வீட்டில் காபி சாப்பிட்டேன்''. "சரி, பிளாஸ்கில் ஊற்றி வைக்கின்றேன், வந்து எடுத்துகொண்டு போ". "ரொம்ப தேங்க்ஸ் சார். என் அண்ணன்கூட இப்படியெல்லாம் சொன்னதில்லை. இங்கே வந்ததிலிருந்து நான் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன்". "நீ வந்து 3 வருடமாகிவிட்டதல்லவா?" "ஆமாம் சார்". "முன்பெல்லாம் துபாய்க்கு போக வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருப்பாயே? இப்பொழுது அந்த பேச்சையே காணோமே, என்னாயிற்று உன் துபாய் கனவு?" "சார், துபாயில் பணம் வேண்டுமானால் சம்பாதிக்கலாம். இங்கே பணத்துடன் என்னை எல்லோரும் சொந்தக்காரனாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்களே, இந்த சந்தோஷம் அங்கே கிடைக்குமா? அதனால்தான் சார், அந்த ஆசையை விட்டுவிட்டேன்". "நீ வாழ்க்கையில் முன்னுக்கு வரவேண்டும். இங்கேயே சந்தோஷம்என்று இருந்துவிடாதே, முன்னேற பாருப்பா. எனக்கென்னவோ நீ சீக்கிரமே பெரிய ஆளாகிவிடுவாய் என்று தோன்றுகிறது. இந்த நறுமணத்தை இன்னும் கொஞ்சம் ஆராய்ச்சி செய்துவிட்டு, மேலே வந்து எனக்கும் சொல்" என்று நகர்ந்தான் மாறன்.

➻➻➻

"அம்மா, அம்மா, நான்தான் செந்தாமரை. இந்த அபார்ட்மெண்ட்ஸ் வீடுகளிலெல்லாம் வேலை செய்பவள். உங்கள் வீட்டிற்கும் வேலை செய்ய வேண்டுமா? என்னென்ன வேலை, எத்தனை மணிக்கு என்று சொல்லுங்கள், கரெக்டாக வந்துவிடுவேன். ஆமா, இங்கென்னமா

வைத்திருக்கிறீர்கள்? இந்த மாதிரி பூவை நான் பார்த்ததே கிடையாதே. என்ன பேரு? குடை பிடிக்கிறாபோல இருக்கே, நல்லா வாசனை வேற வருதே".

"அதுவா, அதற்கு பேர் நாகலிங்கப்பூ. சிவலிங்கமும் அதற்கு மேலே குடையும் வைத்தாற்போல் இருக்கும். இந்த பூ வைத்திருக்கின்ற இடத்தில் பணம் குவியுமாம். அதனால் இந்தப் பூவுக்கு செல்வவளமுன்னு பேர் வச்சிருக்காங்க". "ஏம்மா, நிஜமா இந்தப் பூவை வச்சா பணம் வருமா?" "நிச்சயமா வரும். ஆனால் வைக்கிற இடம் சுத்தமாக இருக்கணும். இந்தப் பூ இருக்கிற வீடும் சுத்தமாக இருக்கணும். அப்படியிருந்தா நிச்சயமாகப் பணம் வரும்". "அப்படியாம்மா, ஏம்மா எனக்கும் இரண்டு பூ கொடேன், நானும் வைக்கிறேன். என் அக்காவிற்குக் கண்ணாலம் கட்டணும், இன்னும் ஆறு மாசத்திலே. கையிலே காசில்லையேன்னு எங்க ஆத்தா புலம்பிகிட்டேயிருக்கு. நானும் கீழ்வீட்டு முல்லையம்மாகிட்டே கடன் கேட்டிருக்கிறேன். அவங்கதான் பேங்கிலே வேலை பார்க்கிறாங்க. கத்தைகத்தையா பணம் எண்ணுவாங்களாம். அவங்க கொடுத்தாலும் கடனாகத்தான் கேட்கமுடியும். ஆனால் இந்தப் பூவை வச்சா பணம் வருமுன்னு சொல்றீங்களே, எப்படி வரும்?" "இங்க பாரு, உனக்கு நம்பிக்கையிருந்தா வை. நம்பிக்கையோடு எதுவும் செய்யணும், தெரியுதா?" "அது சரிம்மா. ஏம்மா, அதென்ன ரூமுக்கு ரூம் ஏதோ போட்டோ மாட்டி வச்சிருக்கே? நல்லா இருக்காங்கம்மா. எனக்கும் ஒண்ணு கொடேன். நானும் மாட்டி வச்சி, உன்னைப்போல பூ வக்கிறேனே. இங்க பாரும்மா, நான் வேலையிலே ரொம்ப கரீக்டா இருப்பேன். நீ சம்பளத்திலே கரீக்டா இரு. உன் வேலை எல்லாத்தையும் மினிட்லே முடிச்சிகொடுத்துடறேன்" பேசிக்கொண்டே தாமரை வீட்டை பெருக்கி, துடைத்து, துணிகளை வாஷிங்மெஷினில் போட்டு, பாத்திரங்களை கழுவி, கிரைண்டரில் மாவை போட்டு ஆட்டி, இந்தப் பக்கம் துணிகளைக் காயப் போட்டுவிட்டு, "இந்தாங்கம்மா, மாவை எடுத்துவிட்டேன். பால் எத்தனை மணிக்கு வேணும், எத்தனை பாக்கெட் வேணும், நீ சொல்லிட்டா, மேலே கொண்டுவந்து தரேன். அதற்குத் தனியா காசு கொடுத்துடணும். இல்லைனா நான் கீழயே வச்சிடுவேன், நீ வந்து எடுத்துக்கோ. எப்படி



வேணும் சொல்லு". அரை மணி நேரத்தில் எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு, சேலையை ஒழுங்கு செய்துகொண்டு, "அம்மா, அந்த போட்டோவை மறந்துடாதே. ஏம்மா, ஏதும் துட்டு கொடுக்கணுமா, என் சம்பளத்திலே கழிச்சுக்க. பூவையும் சேர்த்து கொடு" என்று மறக்காமல் வாங்கிக்கொண்டு, "வரேன்மா" என்று மேலே போனாள்.

இரண்டாவது மாடியிலிருந்து லிப்டில் நுழையச் சென்ற மோகன், ஒரு நிமிடம் டாக்டர் சொன்னதை நினைவுபடுத்தி மாடிபடிகளில் இறங்கி செல்வதற்கு ஆரம்பித்தான். 'இனி ஒவ்வொரு நாளுமே காலையில் லிப்டை உபயோகப்படுத்தாமல் படிகளில் இறங்கியே செல்லலாம். அவ்வளவு ஒன்றும் சிரமமாக இல்லை. நல்லதொரு உடற்பயிற்சி' என்று தனக்குள் சொல்லிக்கொண்டே இறங்கியவன், முதல்மாடிக்கு வந்தவுடன், நல்லதொரு வாசனை வருகின்றதை நுகர்ந்து, என்னவென்று சுற்றுமுற்றும் பார்த்தான். முதல்மாடியில் நேற்றுப் புதிதாக வந்தவர்கள்என காயாம்பூ சொன்ன வீட்டிலிருந்துதான் வருகின்றதைப் பார்த்தவுடன், நெருங்கிச் சென்று பார்க்கலாம் என்று திரும்பினான். அங்கே சுவரில் வைக்கப்பட்டிருந்த ஓர் அழகான ஜாடியில் இதுவரை அவன் பார்த்திராத, அழகான மலரொன்றைக் கண்டான். ஒரு நிமிடம் நின்று அம்மலரை ரசித்தான். 'நன்றாக இருக்கின்றதே, இதற்கு என்ன பெயரென்று கேட்கலாமா' என்று யோசித்தவனுக்கு காலை நேரத்தில் எதற்குத் தொந்தரவு செய்வது, மாலையில் வரும்பொழுது இதைப் பற்றி விசாரிக்கலாம்என்று சென்றுவிட்டான்.

"காயாம்பூ, காயாம்பூ, எனக்கு ஸ்டோரிலிருந்து கொஞ்சம் வெல்லம் வாங்கி கொண்டுவந்து தர முடியுமா?"

"அதற்கென்னமா, தாமரை கையில் சொல்லியிருந்தால் அது வாங்கிக் கொண்டுவந்து தந்துவிடுமே. சரி கொடுங்கம்மா" என்று

சொன்ன காயாம்பூ, "ஏம்மா, இந்த பூவுக்கு என்ன பேர்? குடை வைத்த பூவா? நல்லா வாசனை வருது. இதுவரை இந்த மாதிரி பூவை நான் பார்த்ததே இல்லை. உங்களுக்கு எங்கிருந்து இந்தப் பூ கிடைத்தது? பூக்காரம்மா இந்த நேரத்திலே வரமாட்டாங்களே, சாயந்திரம்தான் வரும்".

"இந்தப் பூவுக்குப் பேரு நாகலிங்கப்பூ. இது இருக்கிற இடத்தில் பணத்திற்குப் பஞ்சம் இருக்காது. இதுக்கு பேரே செல்வவளம் ஆகும்".

"அப்ப, இந்தப் பூவை வச்சிக்கிட்டா நம்மகிட்டே பணம் வந்துடும் அப்படின்னு சொல்றீங்களா?" "ஆமா, நம்பிக்கையோடு வச்சா சீக்கிரமா வரும். இல்லைன்னாக்கூட நீ வச்சா, அதற்கு ஒரு பலன் இருக்கும். இன்னைக்கு கிடைக்கலைன்னாக்கூட நிச்சயமா ஒரு நாளைக்கு உனக்குக் கிடைக்கும்". "அம்மா, எனக்கும் ஒரு பூ கொடுங்க. நம் 'பி' பிளாக்கில் ராமபத்ரன் சாருக்குத்தான் கொஞ்சம் கடன் ஜாஸ்தியா இருக்கு. பாவம், பொண்ணு கல்யாணத்திற்கு வாங்கினது. அவர்கிட்ட கொடுத்து, வைக்கச் சொல்றேன்".

"ஏம்ப்பா, உனக்கு வேண்டாமா?"

"அம்மா, எல்லாருக்கும் பணம் வேணும். ஆனா எனக்கு இப்ப கிடைக்கிறது தாராளமா இருக்கு. என் கல்யாணத்திற்குப் பணம் சேர்த்துகிட்டு இருக்கேன். செந்தாமரைக்கும் எனக்கும் மனசு ஒத்து போச்சு. சீக்கிரமா கல்யாணம் செய்துகிறதா முடிவு பண்ணிட்டோம். கோயில்லே செய்யிறதாவும் பேசிக்கிட்டோம். இருந்தாலும் கொஞ்ச செலவு இருக்கே. எல்லாமும் நானே செய்யலாமுன்னு நினைச்சிக்கிட்டு இருக்கேன். எங்களுக்கு சீக்கிரம் கல்யாணம் நடக்கணும். ஆனா, என்னைவிட ராமபத்ரன் சாருக்கு உடனடியா பணம் கிடைக்கணும். அவர் வட்டி கட்டியே சம்பளம் முழுசும் தீர்ந்துபோகுது. இன்னும் இரண்டு பசங்க படிச்சிக்கிட்டு இருக்காங்க. முதல் பெண்ணுக்குக் கடனை வாங்கிக் கல்யாணம் பண்ணுனா, இன்னும் இருக்கிற பொண்ணுங்களுக்கு என்ன பண்ணுவார்? ஏம்மா இந்தப் பூவை வச்சா லாட்டரியில் பணம் கிடைக்குமா?"



"அப்படிக் கிடைக்காதுப்பா. ஆனா, நமக்குச் சேரவேண்டியது, நமக்கு உரியது எங்கிருந்தாவது நல்லபடியா வந்துசேரும்", கூறிக்கொண்டே உள்ளிருந்து இரண்டு நாகலிங்கப்பூவை ரோஜா கொண்டுவந்து கொடுத்தாள். "உன் நல்ல மனசுக்கு உனக்கு சீக்கிரமா கல்யாணம் நடக்கும்". "உன் வாக்கு பலிக்கணும் அம்மா. நான் வரேன்மா. வெல்லத்தை வாங்கி தாமரை கையில் கொடுத்தனுப்பறேன்".

⊷ ⊷ ⊷

"மோகன், உங்களுக்கு ஒரு சந்தோஷச் செய்தி. உங்களை சீனியர் சூப்பர்வைசராக பதவியுயர்வு கொடுத்திருக்கிறார்கள். உங்களுக்கென கார் அலாட்மெண்ட்டும் செய்திருக்கிறார்கள். மாதம் 6000 ரூபாய்போல் சம்பளம் அதிகரிக்கும். மேலும் O.T.யும் உண்டு. எப்படியும் ஒரு பத்தாயிரம் ரூபாய்போல் அதிகரிக்க வாய்ப்புண்டு. என்ன சந்தோஷம்தானே?" "நிச்சயமா சார்".

"கங்கிராஜுலேஷன் மோகன். வேலைக்கு வந்து சேர்ந்த இரண்டு வருடங்களில் இரண்டு இன்கிரிமெண்ட், பதவி உயர்வு".

"இன்னைக்கு சார் நரி முகத்தில் முழித்திருப்பார்என நினைக்கிறேன்".

தன் இருக்கையில் வந்து அமர்ந்த மோகன், காலையில் ஆபீசுக்கு புறப்பட்டபொழுது என்ன நடந்தது என்று யோசித்தவன் முன்னால் முதல்மாடி பூ நினைவிற்கு வந்தது. சாயந்திரம் துளசியையும் அழைத்துக்கொண்டு 4ஆம் நம்பர் வீட்டிற்குச் செல்லவேண்டும் என்று தீர்மானித்தவன், அந்தப் பூவிற்கு என்ன பெயர் இருக்கும் என்று யோசித்தான்.

"அப்பா மோகன், கொஞ்சம் இந்த உலகத்திற்கு வருகின்றாயா? இன்றைக்கு எல்லோருக்கும் lunch அல்லது SKCயா?" "சார், நிச்சயமாக இரண்டும் வாங்கிக்கொடுப்பார். இன்றைக்கு ராம்பிரசாத் சாப்பாடுதான் நம் எல்லாருக்கும். இப்பொழுதே போன் செய்து கொண்டுவரச் சொல்லி விடலாமா?" என்ற குரல் மோகனை ஆபீஸுக்கு அழைத்துகொண்டு

வந்தது. மனம் சந்தோஷத்தில் மிதக்க ஆரம்பித்தது. பூவின் நினைவும் கூடவே வந்துகொண்டிருந்தது.

"ஹலோ, மிஸ்டர் ராமபத்ரன் இருக்கிறாரா?"

"ஆமாம், நான்தான்".

"நான் சேஷாத்திரி பேசுகிறேன். உங்கள் அப்பாவின் ஆக்ஸிடெண்ட் கேஸ் இன்றைக்கு சுமுகமாக முடிவடையும்போல் இருக்கிறது. முடியுமானால் இன்றைக்கு சாயந்திரம் என் ஆபீசுக்கு வந்தால் இன்ஷூரன்ஸ் கம்பெனி ஆபீசர்களை வரச் சொல்கிறேன். விஷயத்தைப் பேசி முடிவு செய்துவிடலாம். அனேகமாக நாம் கேட்ட எட்டு இலட்சத்திற்கு ஒத்துகொள்வார்கள்போல் தெரிகிறது".

பதில் சொல்லமுடியாமல் திகைத்த ராமபத்ரன், சரி என்று சொன்னோமா, இல்லையா என்று பத்து நிமிடத்திற்கு பின்பும் யோசனை செய்தாலும் எதுவும் நினைவிற்கு வரவில்லை. அப்பா லாரியில் அடிபட்டு இறந்து 10 வருடங்களுக்கு மேலாகிறது. நஷ்டஈட்டிற்காகப் பெரிதும் முயன்றும் எதுவும் கிடைக்காமல் இழுபறியாகவே இருந்துவந்தது. அம்மாவும், அப்பா இறந்துபோன இரண்டு வருடங்களுக்குபின் இறந்துபோக, அதற்குப்பின் சுத்தமாக மறந்தேபோனார். வக்கீல் தம் பால்யநண்பன் என்பதால் கிடைத்தால் வாங்கிக்கொள்வோம், இனி கேட்கவேண்டாம் என்று தீர்மானித்துவிட்டு, எப்பொழுதாவது நண்பனைச் சந்திக்கும்போது அவனாகவே 'உன் கேஸைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறேன்' என்று சொல்லும்பொழுது, அப்படியா என்று கேட்டுவிட்டு, 'ஏதோ மரியாதைக்காகச் சொல்கிறான்' என்று இவரும் அதுபற்றி மேலும் விசாரிக்காமல் விட்டுவிடுவார். ஆனால் ஏதோ மந்திரத்தில் மாங்காய் விழுந்தாற்போல் இருக்கிறதே. என்ன நடக்கிறது, ஒன்றுமே புரியவில்லையே. இந்த உலகத்தில் நடப்பவற்றிற்கெல்லாம் காரணம் இருக்குமாமே. அப்படியென்றால் இன்றைக்குப் பணம் கிடைக்கப் போவதற்குக் காரணம் என்ன? தன் மனைவியின் ஞாபகம் வர உடனடியாக வீட்டிற்குப் போன் செய்து விஷயத்தைச் சொன்னார்.



''காயாம்பூ, நீ அதிர்ஷ்டக்காரனப்பா. உன் கல்யாணத்தை என்றைக்கு வைத்துக்கொள்ளலாம் சொல்லு. எல்லாச் செலவையும் நான் பார்த்துக் கொள்கிறேன். நம் அபார்ட்மெண்டிலேயே வைத்துகொண்டு விடலாம். துணி, சாப்பாடு எல்லாம் first class. என்ன சந்தோஷம்தானே" என்றாள் மனோரஞ்சிதம், ராமபத்ரனின் மனைவி.

"ரொம்ப சந்தோஷமா இருக்கும்மா. ஆனால் தாமரையோட அக்கா-வுக்கு முதல்ல கல்யாணம் நடக்கணும். அவங்க வீட்ல எல்லாமே தடையா இருக்கு. ஒரே சண்டை. சரி, நான் 4ஆம் நம்பர் வீட்டு அம்மாகிட்ட இதுக்கு ஏதாவது பூ இருக்கா அப்படின்னு கேட்கிறேன்".

"மாமா, நானும் அந்த ரோஜாம்மா கொடுத்த பூவை எங்க வீட்ல கொண்டுபோய் வச்சேன். இப்ப பாரேன், நம்ம கல்யாணத்தை சிறப்பா, நமக்கு ஒரு பைசா செலவில்லாம நடத்திடலாம்னு பேசுறாங்க. எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு மாமா. நீயும் வா, அந்த ரோஜாம்மா வீட்லயே போய் முதல்ல விஷயத்தை சொல்லலாம்", என்றாள் தாமரை.

*தொடரும்....*

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பரம்பொருள் நம்மைத் தீண்டாமல் நமக்குப் பரம்பொருள் சித்திக்காது. அவனால் முடியாததைச் சாதிக்க சமூகம் உதவாமல் மனிதனால் சாதிக்க முடியாது. தனிமனிதனுடைய ஆர்வமே வளர்ந்து சமூகத்தின்மூலம் அவனிடம் மீண்டும் வருகிறது. மனிதனே ஆரம்பம்.

***பரம்பொருளால் சித்திக்கும் பரம்பொருள்.***

# உலகம்–மோட்சம்–ஸ்ரீ அரவிந்தம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## சிருஷ்டி – தலைகீழ் மாற்றம்

பிரம்மம் ஒளிந்து வெளிவர முடிவு செய்ததால் ஏற்பட்டது இந்த சிருஷ்டி. ஒளிவது என்றால் தன் ஆரம்ப நிலைகளை மறப்பது. ஏழு வகை அஞ்ஞானங்கள் அப்படி ஏற்பட்டன. இப்படி ஒளிவதைப் பல வகைகளாகக் கூறலாம்.

1) ஒளிந்து ஞானம் அஞ்ஞானமாயிற்று.
2) சச்சிதானந்தத்தின் எட்டு அம்சங்கள் அதற்கெதிரான எட்டு அம்சங்களாக மாறுவதும் ஒளிவதே. ஞானம் அஞ்ஞானமாவது அவற்றுள் ஒன்று.
3) சத்து, சித்து, ஆனந்தம், சத்தியஜீவியம் மேலேயுள்ளது. ஜடம், சைத்தியப்புருஷன், வாழ்வு, மனம் கீழேயுள்ளது. இந்த மாற்றம் ஒளிவதாகும். இதில்,

    சத்து ஜடமாகிறது.

    சித்து வாழ்வாகிறது.

    ஆனந்தம் சைத்தியப்புருஷனாகிறது.

    சத்தியஜீவியம் மனமாகிறது.

4) சிருஷ்டி பரிணாமமாவது மற்றொரு வகை.
5) அனந்தன் அணுவாவது ஒரு வகை.
6) Process of Creation சிருஷ்டி ஏற்பட்ட வழி என்பதும் ஒளிவதாகும்.

இதை ஜீவனின் எழுவகை என்கிறார். முதற் புத்தகம் 27ஆம் அத்தியாயம் இதை விளக்குகிறது.



## வேதாந்த ஞானம்

வேதாந்தம் வேதத்தைக் கடந்தது. மனிதனுக்கு அறிவு (Reason) உண்டு. அறிவு புலன்களால் உலகையறிகிறது. புலனின்றி நேரடியாக மனத்தால் உலகை அறிய முடியும். மனம் புலன்களினின்று விடுபட்டால் அறிவு ஞானமாகிறது (Reason becomes intuition). இது வேதாந்தம் கண்ட உண்மை. மனிதன் ஞானம் பெற்றால் பாதாளமும், பரமாத்மாவும் ஞானத்தில் இணையும். பரமாத்மாவில் ஞானம் நேரடியாக ஒளியாக இருக்கிறது. பாதாளம் வாழ்வுக்குரியது. வாழ்வில் ஞானம் செயலாகத் தலைகீழாக உள்ளது. வாழ்வு தலைகீழே மாறினால் ஞானம் வெளிவரும். மேலேயுள்ள பரமாத்மாவின் ஞானமும், கீழே பாதாளத்தின் ஞானமும் இணைந்தால் அது (Self) பிரம்மம். அதுவே உலகம்.

## மனம், வாழ்வு, ஜடம்

இன்றுவரை விஞ்ஞானமோ, ஆன்மீகமோ இவை என்ன என்று (definition) விளக்கம் தரவில்லை. சர்க்கார், சட்டம், கல்வி, பொருளாதாரம் போன்ற எல்லாக் கருத்துகளும் விளக்கப்பட்டுள்ளன. ஆனால் மனம், வாழ்வு, ஜடம் விளக்கப்படவில்லை. உலகில் அறிவு வளர்ந்துள்ளது. அது விஞ்ஞான அறிவு. ஆனால்

- விஞ்ஞானி ஜடம் என்னஎன்று கூற முடியாமல் தவிக்கிறான்.
- Biologist வாழ்வு என்னஎன்று கூற வேண்டும்என நினைக்க–வில்லை.
- Psychologist மனம் என்னஎன்று அறியவில்லை.
- Doctor உடல் நலம் என்றால் என்னஎன்று கூறுவது முக்கியம் என நினைக்கவில்லை.
- Philosopher energy என்றால் என்னஎனக் கூறவில்லை.

பகவான் இவற்றை 1914இல் விளக்கியுள்ளார். அவர் கூறிய விளக்கங்கள் புரிந்தால் மனம் நமக்குக் கட்டுப்படும், வாழ்வு கட்டுப்படுவது தோல்வியில்லைஎன்பது தெரியும். ஜடம் விளங்கினால் நம் ஆத்மாவுக்கு அது கட்டுப்படும்.

மனம் என்பது மனோசக்தி. சத்தியஜீவியம் இரண்டாகப் பிரியுமிடத்தில் ஏற்படுகிறது. பிரியுமிடத்தில் உற்பத்தியாகும் மனம் பிரிக்கும் கருவியாகிறது. சத்தியஜீவியம் முழுப்பார்வையுடையது. அதன் பார்வைக்கு உலகம் முழுவதும், ஏன் பிரபஞ்சம் முழுவதும் தெரியும். சத்தியஜீவியம் இரண்டாகப் பிரியும் பொழுது இடையில் ஏற்படும் மனம் ஒரே பார்வையில் இருபுறமும் பார்க்க முடியாது. ஒரு பகுதியை ஒரு பார்வையிலும், திரும்பி மறுபகுதியையும் பார்க்க வேண்டும். பார்வை பகுதியாகிறது. இது பிரிக்கும் மனத்தின் தன்மை. அதிலிருந்து நம் மனம் வரை எந்த நேரத்திலும் மனம் ஒரு பகுதியை மட்டும் பார்க்கும். அதனால் அதன் பார்வை பகுதியானது. பகுதியாகச் செய்வது பிரிப்பது. பிரிப்பது தொடரும். ஏனெனில் மனம் அனந்தமானது. அனந்தம் முடிவற்றது. அதனால் முடிவற்று மனம் பிரிக்கிறது. பிரிப்பது தொடர்வதால் அகண்டம் கண்டமாகி, அணுவாகி, “துச்சேன” என்ற சிறு பகுதிக்கு வருகிறது. இதற்கு மேல் பிரிக்க முடியாது என்பதாலும் பிரிக்கும் மனம் அனந்தமானது அதனால் அது செயல்படாமலிருக்க முடியாது என்பதாலும், பிரிந்த அணுக்கள் சேர்ந்து ஜடம் உருவாகிறது.

## வாழ்வு

மனத்தில் ஞானம், உறுதியுண்டு. உறுதியில் ஒளியில்லை. ஞானம் ஒளிமயமானது. ஒளி உறுதிமேல் செயல்பட்டால் சக்தி பிறக்கிறது. இதை சக்தி லோகம், வாழ்வு என்கிறோம். ஒளி உறுதியில் மறைவது வாழ்வு. ஒளி முழுவதும் உறுதியில் மறைந்தால் சக்தி ரூபம் பெற்று இருண்டு ஜடமாகிறது. ஜடத்தைப் பல வகைகளாக வர்ணிக்கலாம். அவற்றுள் இது ஒன்று.

## ஜடம்

- பிரம்மத்தின் முடிவு – சிருஷ்டிக்க முடிவு செய்தது – சச்சிதானந்தத்தில் தெரிகிறது.
- சச்சிதானந்தம் சத் எனப்படும். இது ஜீவன். முழுமையான விழிப்புடைய ஜீவன் Conscious Being. பகவான் இதை Self-Conscious Being எனவும் கூறுவார்.



- இது தன்னிச்சையாகச் செயல்படும். (Self-Conception)
- தன்னைப் பிரபஞ்சத்துள் வெளிப்படுத்த சத் முடிவு செய்தது.
- அவ்வெளிப்பாடு substance பொருளாயிற்று. அது Spiritual substance.
- பிரபஞ்சம் சத்தின் வெளிப்பாடு. (பிரம்மத்தின் வெளிப்பாடு எனவும் கூறலாம்.)
- பிரபஞ்சத்தில் மனமும், வாழ்வும் செயல்படுகின்றன.
- மனம் பிரிக்கும், வாழ்வு சக்தியை வெளிப்படுத்தும்.
- மனத்திற்குப் பிரபஞ்ச கடமையொன்றுண்டு.
- மனம் எதையும் அணுவாகும்வரைப் பிரிக்கும் திறனுடையது.
- அணுவைப் பிரிக்க முடியாது. ஆனால் மனம் செயல்படுவதை நிறுத்தாது.
- பிரிக்க முடியாத மனம் செயல்படுவதை நிறுத்த முடியாது என்பதால் சேர்க்கும். பிரிப்பதும், சேர்ப்பதும் ஒன்றன்றோ!
- அணுக்கள் சேர்ந்த தொகுதி ஜடமாகும்.
- இதுவே ஜடத்தின் விளக்கம்.

  சத்புருஷன் தன்னைத் தன்னிச்சையாகப் பிரபஞ்சத்தில் வெளிப்படுத்திப் பொருளாகி, அப்பொருள் மனத்தால் அணுவாகப் பிரிக்கப்பட்டுச் சேர்ந்த தொகுதி ஜடம்.

- ஜடம் பிரம்மம். மனமும், வாழ்வும் பிரம்மம்.
- ஜடம் ரூபம் பெற்றது. சக்தியை உட்கொண்டது.
- மனம் ஜடத்திற்கு ரூபமளித்தது. வாழ்வு ஜடத்திற்கு சக்தியளித்தது. இச்சக்தி ஜடத்துள் மறைந்துள்ளது.
- பிரம்மம் தன்னைத் தன்னுள் கிரகித்துக் கொண்டதால் ஜடம் ஏற்பட்டது.
- அதனால் ஜடத்தில் பிரம்மம் தன்னை மறந்து விட்டது.
- பிரம்மம் ஜடத்துள் கலந்து ஒளிந்து சிக்கியுள்ளது.

– ஜடத்துள் இரகஸ்யமாக மறைந்துள்ள கடவுளை – பிரம்மத்தை – கண்டுபிடிக்க வேண்டி மறைந்துள்ள ஜீவியத்திற்கு ஜடம் ஆசை காட்டுகிறது.

Page No.239 The Life Divineஇல் Matter என்ற அத்தியாயத்தின் கடைசி பாராவில் உள்ள 7 கருத்துகள் 7 வாக்கியமாக அமைகின்றன. அவற்றுள் இது முக்கியக் கருத்து. அதன் விளக்கம் கீழேயுள்ளது:

– ஜடம் என்பது சத்என மேலே கூறினோம்.

  சத் ஜடமாகமாற சித் வழியாக வருகிறது.

  சத் ஜடமாகமாற உதவுபவை மனமும், வாழ்வும்என்பதை மேலே கூறினோம்.

  ஜடம்என்பது ரூபம் பெற்றது.

  ஜடத்திற்கு இந்த ரூபத்தை அளித்தது மனம். ஏனெனில் எல்லா ரூபங்களும் மனத்தால் அளிக்கப்பட்டவை.

  மனம் தந்த ரூபத்தை சித்திக்க வைத்தது வாழ்வு.

  **ஜடம் பெற்ற ரூபத்துள் சித் - ஜீவியம் - மறைந்துள்ளது.**

  இந்த ஜீவியத்துள் ஜீவன் மறைந்துள்ளது. ஜீவன்என்பது சத்.

  சத் - சித் - சக்தி - ரூபம் - ஜடம் என்ற வரிசை ஏற்படுகிறது. அதையே ஜீவன் - ஜீவியம் - வாழ்வு - ரூபம் - ஜடம் எனலாம்.

  ஜடத்துள் அதன் சத்தியமான ஜீவியம் ஒளிந்துள்ளது. அந்த ஜீவியத்துள் சத்என்ற ஜீவன் மறைந்துள்ளது.

– மறைவது சிருஷ்டி (involution).

– வெளிவருவது பரிணாமம் (evolution).

– சத் தன்னைத் தன்னுள் மறைத்து ஜடமாயிற்று.



ஒளிந்ததைக் கண்டுபிடிப்பது பரிணாமம். அதுவே சிருஷ்டிக்குக் காரணம்.

– கண்டுபிடிக்கும் வேலை ஜீவியத்திற்கு. கண்டுபிடிக்கப்பட வேண்டியது சத் - ஜீவன் - ஒளிந்துள்ள கடவுள் என்ற பிரம்மம்.

– இவ்வேலையை ஆரம்பிப்பது ஜடம்.

  ஜடம் ஜீவியத்தை ஜீவனைக் கண்டுபிடிக்கத் தூண்டு-கிறது, ஆசை காட்டுகிறது.

  தூண்ட உணர்ச்சியைக் கருவியாக்குகிறது.

– உணர்ச்சியால் செயல்படும் மனிதன் தன் ஜீவியத்தால் ஒளிந்துள்ள ஜீவனை (கடவுளை) அடைய முயல்கிறான்.

– **செயல் (மனிதச் செயல்) இறைவனைத் தேடுவதாகும்.**

  செயலுக்கு ஆரம்பம் உணர்ச்சி.

  ஜடம் அவ்வுணர்ச்சியால் மறைந்துள்ள ஜீவியத்தை அதனுள் ஒளிந்துள்ள ஜீவனைக் காணத் தூண்டுகிறது. இதை பாஸிட்டிவாகவும், நெகட்டிவாகவும் கூறலாம்.

  இரண்டும் இறைவனை நாடும் தவமாகும்.

  கடமையுணர்ச்சியால் மனிதன் தன் ஜீவியம் செயல்பட்டு கண்ணுக்குத் தெரியாத இலட்சியத்தை அடைய முயல்வது மனிதன் இறைவனை நாடுவதாகும்.

  மனிதனுடைய எந்தச் செயலும் வாழ்வில் இறைவனை அடையும் தவமாகும், யோகமாகும்.

  குடும்பம் முன்னுக்கு வரும் இலட்சியம் தன்உணர்வில் மறைந்துள்ளதை செயலால் அடைய முயலும் மனிதன் உண்மையில் இறைவனை குடும்பத்துள் தேடுகிறான்.

  திருடனுக்கும் இதுவே உண்மை. திருட்டை நாடும் திருடன் இறைவனைத் தேடித் தவம் செய்கிறான்.

- பிரபஞ்சத்தில் வெளிப்பட்ட பிரம்மம் ஜடம்.
- ஜடம் சக்தி பெற்ற ரூபம்.
- இந்த ரூபம் பிரம்மம் தன்னைத் தனக்கே அடையாளமாகக் காட்டுவது.
- ஜீவியம் தன்னை ஆனந்தமாக அனுபவிக்கும் புறம் ஜடம்.
- ஜடம் சச்சிதானந்தம்.

  சச்சிதானந்தம் தன்னைத் தானேஅனுபவிக்க மனம்என்ற அரங்கத்தில் புறமான ஞானமாகவும், செயலாகவும், ஆனந்த–மாகவுமானது ஜடம்.

  **ஜடம் சச்சிதானந்தம் தவிர வேறில்லை.**

- மனம் ஆத்மாவைப் புலன் வழி ஜடமாகக் காண்கிறது.

## உடல் மீது வெறுப்பு

அழியும் உடலுக்கு அர்த்தமில்லைஎன தவசிகள் உடலைப் புறக்கணித்தனர். உடலை ஒதுக்குவது ஜடத்தை விலக்குவது. பூமாதேவியைப் புறக்கணிப்பது. பழைய நாகரீகங்கள் – மாயன், சால்டியன், வேதம், கன்பூசியஸ் – பூமியைத் தாயாகவும், வானத்தைத் தந்தையாகவும் வர்ணித்ததை பகவான் சுட்டிக்காட்டி, உடலை விலக்குவது சரியில்லை என்கிறார். மேலும் உடலே உயிருக்கும், ஜீவனுக்கும் உரிய பீடம் என்றும் கூறுகிறார்.

## தர்மம், அதர்மம்

மனிதன் தர்ம நியாயத்திற்கும், பாவ புண்ணியத்திற்கும் கட்டுப்பட்டவன். அவனுக்கு மேலேயுள்ள தெய்வத்திற்கும், கீழேயுள்ள விலங்குக்கும் தர்மம், நியாயமில்லை. தெய்வம், மனிதன், விலங்கென மூன்றாகப் பிரியும் பிரபஞ்சம் நம் கொள்கையைப் பூர்த்தி செய்யாது. நம் கொள்கை பூரணம், முழுமை. அதனால் இந்த மூன்றுக்கும் பொதுவானது என்ன? ஆனந்தம் மறைந்தும், வெளிப்பட்டுமுள்ளது. மறைந்துள்ள ஆனந்தம் வெளிப்படுவது பரிணாமம். மேல் லோக ஆனந்தம் பூலோகத்தில் மின்னலெனத் தெறிக்கும். நிலையான



மின்னலை நாடுவது பூரணயோகம். பெரிய மனிதனைத் தெரியுமானால் அவர் செல்வாக்கு ஒரு நேரம் நம் வாழ்வில் க்ஷணம் செயல்படும். நமக்குப் பதவி, அந்தஸ்து இருந்தால், அவருக்கு நாம் தேவைப் படுமானால், அவர் செல்வாக்கு நமக்கு நிலையாகப் பயன்படும். நம் உலகில் ஜடம் ஆனந்தத்தைப் பெற்றால் ஆனந்தம் நிலையாகும். பரிணாமத்தில் சச்சிதானந்தம் ஜடத்தில் – பொருள்களில் – தன்னை வெளிப்படுத்த முயல்கிறது. மனிதன் வெறும் ஜடத்தை நாடி ஏமாந்து போகிறான் என்று பகவான் கூறுகிறார். ஆனந்தம் ஜடத்தில் வெளிப்படுவது பூலோகச் சுவர்க்கம். சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி மறுப்பது வழக்கு. ஆனந்தம் ஜடத்தில் வெளிப்படுவது பூசாரி சாமியிடம் நமக்காக வரம் கேட்டுப் பெற்று அளிப்பது. படித்ததற்கு அடையாளமாகப் பட்டம் பெறுகிறோம். இப்பொழுது பணம் கொடுத்து பட்டம் படிக்காமல் பெற்றுக் கொள்கின்றனர். அதற்கு அர்த்தமில்லை. கேலிக்கு உரியவராவோம். பட்டம் படிப்பால் நிறைவு பெறுவது ஆனந்தம் பொருளில் வெளிப்படுவது, பண்ணிய புண்ணியம் பயிரில் தெரியும் என்றசொல் ஓர் அம்சத்தைக் குறிக்கும்.

## விஞ்ஞானியும் துறவியும்

துறவி விஞ்ஞானியை ஏற்கவில்லை. விஞ்ஞானி துறவியை ஏற்கவில்லை. துறவி அவனது துறையில் முடிவான பிரம்மத்தை எட்டிவிட்டான். விஞ்ஞானி அவனது துறையில் அனைத்தும் சக்தி (energy) எனக் கண்டதுடன் நிறுத்திக் கொண்டான். அடுத்த கட்டம் போனால் energy is existence சக்திஎன்பது பிரம்மவாழ்வு, existence is being. அவ்வாழ்வு ஜீவன்என அறியலாம். விஞ்ஞானி அதைச் செய்ய வேண்டும்என்கிறார் பகவான்.

## வேதம் கண்ட ஒற்றுமை, ஒருமை

வேத ரிஷிகளுக்கு மலை கடவுள், நதி ஜீவநதிஎன இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்தனர். புருஷனும், பிரகிருதியும் ஒன்று எனக் கண்டனர். உபநிஷதம் அவற்றைப் பிரித்தது. அது சன்னியாசத்தில் முடிந்தது. புத்தர் அதை நிலைநிறுத்தினார். இன்றுவரை இந்தியாவில் வாழ்வும், துறவறமும் பிரிந்து நிற்கின்றன. நாம் கூறுவது ஸ்ரீ அரவிந்தம், முழுமை, பூரணமாதலால் எதையும் விலக்க முடியாது.

விலக்கிப் பூரணத்தையடைய முடியாது. வேதம் உடல் வாழ்வு, உபநிஷதம் மனம், இடைப்பட்டது வாழ்வு. மனத்தைக் கடந்தது ஆத்மா. அது வளராத ஆத்மா. வளரும் ஆத்மா அதைக் கடந்தது. அது சத்தியஜீவியம். பகவான் ஸ்ரீ அரவிந்தர் இந்த ஒற்றுமை சத்தியஜீவிய ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்கிறார். அதாவது மனிதன் உபநிஷத காலத்துப் பிளவை விலக்கி, வாழ்வு, மனம், ஆத்மாவைக் கடந்து வளரும் ஆத்மாவையடைய வேண்டும். அங்கு ஒற்றுமையைக் காண வேண்டும் என்கிறார்.

## சிருஷ்டி, பரிணாமம்

இறைவன் உலகுக்கு வருவது சிருஷ்டி. மனிதன் இறைவனையடைவது பரிணாமம். மனிதன் சிருஷ்டியை அறிந்தது போல் பரிணாமத்தை அறிய வேண்டும்என விஞ்ஞானியையும், யோகியையும் பகவான் குறிப்பிடுகிறார். புல்லாகிப், பூடாகி, பல்விருகமாகிஎனக் கூறிய மரபு பரிணாமத்தையறியும். ஆனால் சர்வம் பிரம்மம் என்றவர் அதைக் கருதாதது போல், பரிணாமத்தை ஒரு கொள்கையாக மரபு ஏற்கவில்லை. அதை ஏற்க வேண்டும். அதுவே பூரணயோகம்.

## அறிவும், ஜீவியமும்

- அறிவு அறிய முடியாததை – கடவுளை – ஜீவியம் அறியும்.
- எண்ணத்தைக் கடந்த ஞானமுண்டு. அது வாழ்வு, மனம், சத்தியஜீவியத்தை ஆராயும்.
- மனம், வாழ்வு, ஜடம்என்பது மூவகையான சக்தி.

  வேலைஎன்பது சிருஷ்டியும், பரிணாமமுமாகும்.

  உறுதி சிருஷ்டிக்காக சக்தியைப் படைத்தது.
- உறுதி முடிவில்லாத ஞானத்தை நாடுகிறது.

## நாத்திகனின் மறுப்பு

- பிரபஞ்ச ஜீவியத்தைக் கடந்து பிரம்ம ஜீவியம் உண்டு.



- சாட்சிஎன்பது பிரபஞ்ச ஜீவியம். நமது ஜீவியம் விரிவதால் மட்டுமே அதையறிய முடியும்.
- அத்வைதம் கூறும் பிரம்மத்தின் பின்னால் அசத் உள்ளது.
- ஜடம் நித்தியமில்லைஎன துறவி அசத்தைக் கண்டு கூறுகி–றான். பிரம்மம் மனித குலம் தவறிவிட்டதுஎனக் கூறுவதில்லை அது. மனிதன் சிறப்படையத் தேவையான நிபந்தனையை அதன்மூலம் அவன் – பிரம்மம் – எனக் கூறுகிறான்.

## பரம்பொருள்

- ஜடமும், ஆன்மாவும் முதலில் பிரபஞ்ச ஜீவியத்தில் சந்திக்கின்றன.
- மௌனம் செயலுக்கு ஆதாரம், செயலை மௌனம் நிராகரிக்கவில்லை.
- சிறந்த மனிதன் சத்தில் ஊன்றிய காலை எடுக்காமல் அசத்துள் நுழைய வேண்டும்.
- இது ஜடமும், ஆன்மாவும் பிரம்ம ஜீவியத்துள் சந்திப்பதாகும்.

*தொடரும்....*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பிரம்மரிஷி உலகத்தை பிரம்மமாகக் காண்கிறார். பூரணயோகி உலகத்தை பிரம்மத்தின் வெளிப்பாடாகக் காண்கிறார்.

பிரம்மரிஷி பிச்சைக்காரன் மனதிலுள்ள ஆத்மாவைக் கண்டால், பூரணயோகி பிச்சைக்காரனையே பிரம்மமாகக் காண்கிறார்.

***பிச்சைக்காரனை பிரம்மமாகக் காணும் பிரம்மஞானம்.***

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**891) தீமை, தவறு ஆகியவற்றை நாம் பொறுத்துக்கொள்வதுடன் ஜீவன் சிருஷ்டிக்க முயன்றால் தீமையை நன்மையின் பகுதியாக அறிந்து நாமே உற்பத்தி செய்து பின்னர் அதைத் தாண்டி வரவேண்டும். திருடனுக்குப் பணம் கொடுப்பது பாவம். அதைத் திருப்பிப் பெறும் ஆனந்தத்திற்கு இணையில்லை.**

***தீமையை நன்மையாக அறிவது முடிவற்ற ஆனந்தம்.***

✡ திருடனுக்கு அனுக்கிரஹம் செய்ய காணிக்கையைத் திருடவேண்டும்;

✡ திருடனுக்கு அருள்புரிய அவனுக்குத் திருடு கிடைக்க உதவ வேண்டும்

என்பவை காதில் நாராசமாகப் பாயும். திருடன் கோயிலில் அர்ச்சனை செய்து, திருடப்போய், திருடி தப்பித்துக்கொள்கிறான்என்பது நடைமுறை. ஏன் கடவுள் அவன் திருடும்பொழுது பிடித்துக்கொடுக்கவில்லை?

✡ டாக்டர் வயிற்றைக் கீறிக் குடலை எடுக்க நாம் பீஸ் கொடுக்கிறோம். அது நமக்கு நல்லதுஎனப் புரிந்துகொண்டுள்ளோம்.

✡ அதேபோல் திருடன் திருடுவது, தப்பித்துக்கொள்வது மனிதகுலத்திற்கு நல்லதுஎன விளங்குவதில்லை.

தத்துவமாகச் சொன்னால் புரியும்.

நடைமுறைக்கு ஏற்பக் கூறினால் எரிச்சல் வரும்.

**சர்வம் பிரம்மம் என்றனர் ரிஷிகள்.**

அது உண்மையானால் திருடனும் பிரம்மம், திருட்டும் பிரம்மம்.

அழகாக, அலங்காரமாக, இனிமையாக விருந்து சாப்பிட அலங்கோலமான சமையலறை, ஒரே சத்தமான பாத்திரம் தேய்க்குமிடம், அழுக்கில் ஊறிய சமையல்காரன் தேவை என்பதை நாம் ஏற்போம்.



திருடன் மனம் மாறி திருட்டைக் கைவிட்டால் அது பெரிய ஆனந்தம்.

அது நடக்க அவன் 'திருட்டு' என்ற அனுபவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

அது பூர்த்தியாகும்வரை ஆண்டவன் அவனுக்கு திருடு கிடைக்க அருள் புரிவார்.

சேவை ஓர் அனுபவம்போல் தத்துவரீதியாக திருடும் ஓர் அனுபவம்.

இன்றைய குழந்தை நாளைய மனிதன்.

இன்றைய திருடன் நாளைக்கு நல்லவன்.

அனைவரும் குழந்தையாக இருந்தவரே.

ஆத்மா பூரணம்பெற அனைத்து அனுபவமும் தேவை. பிறப்புடன் இறப்பும், நல்லதுடன் கெட்டதும், உயர்ந்ததுடன் தாழ்ந்ததும், ஒளியுடன் இருளும் தத்துவப்படி பிரம்மமே; ஒவ்வொரு ஆத்மாவுக்கும் தேவையான, தவிர்க்கமுடியாத அனுபவம்.

✡ அத்துடன் இருள், அடர்ந்த ஒளி. விஞ்ஞானமும் அதை ஏற்கிறது.

கெட்டது, அப்படியானால் உயர்ந்த நல்லதாகும்.

வியாதியும், உடல்நலனும் ஆத்மாவுக்குத் தேவையான அனுபவங்கள்.

டாக்டர் ஆப்பரேஷனை நாம் கொலைஎனக் கூறுவதில்லை.

அதேபோல் திருடனின் திருட்டை நாம் தவறுஎனக் கூறக்கூடாது.

ஆத்ம விழிப்பிருந்தால் திருடன் நம்மைப்போல் உலகுக்குச் சேவை செய்கிறான்எனத் தெரியும்.

**அது பெரிய சேவை என்கிறார் பகவான்.**

கல்கத்தா காங்கிரஸில் காந்திஜியைக் காணோம். தேடி கக்கூஸில் கண்டனர். அதைச் சுத்தம் செய்ய எவரும் முன்வரவில்லை. காந்திஜி செய்தார். அதனால் அவர் உத்தமர். அதேபோல் திருடன் நம் மனக் குறைகளை, செயல்குறைபாடுகளைச் சுத்தம் செய்கிறான். நாம் கவனத்துடனிருக்க வேண்டி அவன் திருடுகிறான்.

✡ குழந்தையை, அதுவும் சண்டித்தனமான குழந்தையை அடித்து வளர்ப்பது குழந்தைக்கு நாம் செய்யும் சேவை. கவனக்குறைவானவரைத் திருத்த

திருடன் சேவை செய்கிறான்.

❀❀❀

**892) நினைவே ஒரு செயலைத் தீமையாக்குவது; அல்லது தீமையாகக் காண்பிப்பது. செயலில் தீமையில்லை; செயல் வெறும் செயலாகும்.**

***தீமை செயலிலில்லை; நினைவிலுள்ளது.***

உலகம் மாயைஎன்ற கொள்கைக்கு அடிப்படை மேலே கூறியது. நம் நினைவு நம் உலகை உற்பத்தி செய்கிறது. ஒருவரை நல்லவர் என நினைத்தால் அவர் நமக்கு நல்லவர். நாம் நல்லவர்என நினைப்பதாலேயே அவர் நல்லவராகவும் மாற முடியும். பெர்னாட்ஷா நாடகம் "Pygmalion" பிக்மேலியனில் ஒரு புரொபசர் பூக்காரியைப் பெரிய இடத்துப் பெண்போலப் பேசக் கற்றுக் கொடுக்கிறார். புரொபசரும், ஒரு கர்னலும் சேர்ந்து இதைச் செய்தனர். ஆறு மாதத்தில் பெண் பெரிய duchess இடத்துப் பெண்போலப் பேசுகிறாள். அவளை ஒரு பெரிய பார்ட்டிக்கு அழைத்துப் போகிறார்கள். அவள் அழகும், பேச்சும் அனைவரையும் கவருகின்றன. அவள் யார்என அறிய முற்படுகின்றனர். ஒரு ஐரோப்பிய இராஜகுமாரிஎன முடிவு செய்கின்றனர். புரொபசர் அற்புதமாகப் பேசக் கற்றுக்கொடுத்தார். ஆனால் பெரிய இடங்களில் பேச்சுமட்டும் போதாது; பழகத் தெரியவேண்டும். அவளுக்கு 6 மாதத்தில் அவ்வுயர்ந்த பழக்கமும் வருகிறது. புரொபசர் ''நான் உன்னை உயர்ந்தவளாக்கினேன்'' என்ற பொழுது அவள் மறுக்கிறாள். புரொபசர் திருமணமாகாத பிரம்மச்சாரி. ஆங்கிலேயருக்குண்டான gentlemanly manners உயர்ந்த பழக்கமில்லை. சிறுபிள்ளைபோலிருக்கிறார். திறமை அபாரம். பழக்கம் சூன்யம். கர்னல் உயர்ந்த பழக்கமுடையவர். புரொபசர் அப்பெண்ணை நாய்க்குட்டிபோல நடத்துகிறார். அன்பு இருந்தாலும் பழக்கமும், மரியாதையுமில்லை. கர்னல் அவளை லிஸ்ஸாஎன அழைப்பதில்லை. Miss Doolittle மிஸ் டூலிட்டில்என



அழைப்பார். அவள் வந்தால் எழுந்து நிற்பார். அவளிருக்கும் பொழுது ஸாக்ஸைக் கழட்டமாட்டார். எல்லா வகைகளிலும் அவளை Lady லேடியாக நடத்துகிறார். பெண் புரொபசரிடமிருந்து பேசக் கற்றுக்கொண்டாள். கர்னலிடமிருந்து பழகக் கற்றுக்கொண்டாள். அவள் கூறுகிறாள்,

"கர்னல், நீங்கள் என்னை லேடியாக நடத்தியதால்
நான் லேடியானேன்".

நாம் எப்படி ஒருவரைக் கருதுகிறோமோ அப்படி அவர் மாறுவார் என்ற தத்துவம் இங்குக் காணப்படுகிறது. செயல் நல்லதா, கெட்டதா என்பதில்லை. அது செயலிலில்லை. செய்பவர் மனத்தில் இருக்கிறது. பையன் விஷம் சாப்பிட நினைக்கும்பொழுது அதைத் திருடுவது புண்ணியம்; பாவமில்லை. அதனால் திருட்டு புண்ணியமாகாது. மனநிலையைப்பொருத்து திருட்டும் புண்ணியம் ஆகும். நமக்குச் சமூகம் முடிவானது; சமூகம் ஏற்பது சரி; சமூகம் ஏற்காதது சரியில்லை. ஓர் ஆங்கில எழுத்தாளரின் மனைவி அவருடைய நண்பருடன் பழகி, நண்பருக்கு 4 பிள்ளைகள் பெற்றாள். உலகம் அதைச் சரி என்று கூறவில்லை. சரிஎன நடத்தியது. எந்த விசேஷத்திற்கும் அவளை அழைக்கத் தவறுவது இல்லை. அவள் கணவன் அவள் செலவையும், அக்குழந்தைகள் செலவையும் ஏற்று நடத்தினான். அதே சமயம் வேறொரு பெண் தான் விரும்பியவருடன் திருமணம் செய்யாமல் வாழ்ந்தாள். அவள் எழுத்தால் பிரபலமானாள்; பெரும்பணம் சம்பாதித்தாள். விக்டோரியா மகாராணியும் அழைத்து விருந்து செய்தார். என்றாலும்,

அடுத்தவனுக்கு 4 பிள்ளை பெற்றவளை ஏற்கும் உலகம்,
அன்பிற்காக வாழ்ந்தவளை ஏற்கவில்லை.

மனிதனுக்கு உலகம் சொல்வதும், செய்வதும் சரி. மனச்சாட்சியை கலக்கும் திறன் மனிதனுக்கில்லை. உலகமோ, மனச்சாட்சியோ அன்னைக்கு முடிவில்லை. மனச்சாட்சியும் பொன்விலங்குஎன அன்னை கூறுவார். இறைவனே அன்னைக்கு முடிவு.

**கறுப்புப் பணம்:** பணம் கறுப்போ, வெள்ளையோ இல்லை. சம்–பாதிக்கும் முறை கறுப்பாக இருக்கும். அது மனநிலை. கறுப்புப்

பணத்தை சம்பாதித்தவன், அல்லது தகப்பனாரிடமிருந்து பெற்றவன் **மனநிலை வெளுப்பானால், கறுப்பு நாளடைவில் வெளுப்பாகும்**. கடலில் சாக்கடை கலந்தால் கடல்நீர் சாக்கடையாவதில்லை. சாக்கடை தன் அழுக்கை இழந்துவிடுகிறது. பெரிய அளவு ஒளியில் இருள் அழிகிறது. அபரிமிதமான நல்லதில் கெட்டது அழிகிறது. ஏசுவின் பிரதம சிஷ்யர் கோர்ட்டில் ஏசுவைத் தெரியாதுஎன அவருக்குத் துரோகம் செய்தார். பிறகு மனம் மாறினார். மனம் மாறுவது திருவுருமாற்றம். மனம் மாறியதால் பிரதம சிஷ்யரானார். கறுப்பைத் தேடிப் போகவேண்டாம். அது முறையாகாது. சந்தர்ப்பம் கறுப்பான செயலை, மனிதனை, பணத்தை, செல்வத்தைக் கொண்டு வரலாம். அது சந்தர்ப்பத்தின் நிர்ப்பந்தம். அதை மறுப்பது சரியாகாது. நம்மைத் தேடி வருவது நாம் மாற வருவது. உள்ளதை ஏற்று, அந்த அளவுக்கு மனத்தை வெளுப்பாக மாற்றினால் கறுப்பு வெளுப்பாகும். தாயாருக்கு திருமணத்திற்கு 5 ஆண்டு முன் பிறந்தவர் 1950இல் பட்ட பாடு பெரியது. அது ஐரோப்பிய நாடு. இது அவர் தவிர்க்க முடியாத சந்தர்ப்பம். அன்னையிடம் வந்தபின் அவர் மனம் புழுங்கியது குறைந்து, விலகியது. அப்பிள்ளைக்கு சட்டத்தில் சம உரிமையில்லை. திருவுருமாற்றத்தைத் தீவிரமாக ஏற்றார். 10 ஆண்டுகளாயின. நாட்டில் சட்டம் அவர்கட்கு முழுஉரிமை கொடுத்தது. அதன்பின் எவரும் "யார் உன் தாயார்?" என்றுதான் கேட்கலாம். "யார் உன் தகப்பனார்?" என்று கேட்க முடியாத நிலை ஏற்பட்டது. நல்லதும் கெட்டதும் செயலிலில்லை; மனத்தில் மட்டும் உண்டு.

*தொடரும்.....*

❀❀❀

## ஜீவிய மணி

**உடலால் பூர்த்தியாகாதது உயிரில் பூர்த்தியாகாது.**

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

# வேதம் - ஆராய்ச்சி

இங்கிலாந்து பிரதமருக்கு ஆண்டுக்கு £ 5,000 சம்பளமிருக்கும் பொழுது, இந்தியாவில் வைஸ்ராயிக்கு ஆண்டுக்கு £ 24,000 சம்பளம் (ராஜாஜி கவர்னர் ஜெனரலாக வந்தபொழுது அதை மாதம் ரூ.15,000மாக மாற்றினார். சுமார் பாதியாக்கினார்). பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தியாவே மகுடமாக இருந்த நாட்கள் அவை. அது மணிமகுடம்.

எலிபின்ஸ்டன் என்பவருக்கு வைஸ்ராய் பதவியை அளிக்க விரும்பினர். அவர் அதை ஏற்கவில்லை. வேதத்தில் தாம் ஆராய்ச்சி செய்யப்போவதாகவும் வைஸ்ராய் பதவி அதற்குத் தடையாகும் எனக் கூறினார். மேல்நாடுகளில் இன்றும் எந்த துறையிலும் ஆராய்ச்சியை மேற்கொள்வது சன்னியாசத்தை ஏற்பதற்கு ஒப்பாகும். வரலாறு, பிற மொழிகள், விஞ்ஞானம், அணு, கணிதம்என ஆயிரம் துறைகளில் ஆராய்ச்சி நடக்கின்றது. அவற்றை ஏற்பது எளிதன்று. காட்டில் போய் கண் மூடி நிஷ்டையிலிருந்து உடலில் செல்புற்று கட்டினாலும் உணராமல் தவம் செய்து இறைவனைக் காண்பதற்குரிய விரதம் ஆராய்ச்சி செய்பவர்கட்கு அவசியம்.

✡ *சாஸ்திரம் சரஸ்வதி.*

✡ *அதைப் பயில சரஸ்வதியைத் தொழவேண்டும்.*

✡ *அவ்வளவு நெறியாகப் பயின்று பெரிய நாகரீகத்தை மேல்நாட்டார் கட்டியுள்ளனர்.*

✡ *அவர்கள் தேடிக் கண்டுபிடித்தது அறிவு; ஞானமில்லை. அறிவு வாழ்வுக்கு வசதியளிக்கும். மனத்திற்கு விவேகம் தாராது. ஆத்மாவுக்கு விழிப்பேற்படுத்தாது. அது வேதம் பயின்றால் பெறக் கூடியது.*

❀❀❀

# அதிசயம் என்ன விலை?

வசதி குறைவான அமெரிக்க குடும்பம். சிறுவனுக்குத் தலைவலி. ஆஸ்பத்திரியில் காண்பித்தார்கள். மூளையில் கட்டி வளருவதாக டாக்டர் சொன்னார். ஆப்பரேஷனுக்குச் செலவு செய்யும் வசதியற்ற குடும்பம். தாயாரும் தகப்பனாரும் பேசுவதைச் சிறுவனின் தங்கை கேட்டுக் கொண்டிருந்தாள். 'இது பெரிய ஆப்பரேஷன்', 'செலவை எப்படிச் சமாளிப்பது?', 'நமக்கு இது முடியாது', 'என்ன செய்வதுஎனத் தெரியவில்லை', '**அதிசயம் குணப்படுத்தும்**', 'யாரைக் கேட்கலாம்?', 'யார்தான் என்ன சொல்ல முடியும்?', 'அதிசயம் நிச்சயமாகக் குணப்படுத்தும்' எனத் தாயாரும் தகப்பனாரும் நெடுநேரம் பேசுவதைக் கேட்ட பெண்குழந்தை 'அதிசயம் குணப்படுத்தும்' எனப் புரிந்துகொண்டு தன்னிடமிருந்த சேமிப்பை எடுத்துப் பார்த்தாள் 1½ டாலரிருந்தது. மருந்து கடைக்குப் போனாள். 'அதிசயம் என்ன விலை?' எனக் கேட்டாள். என்ன வேண்டும்எனப் பலரும் மீண்டும் மீண்டும் கேட்டனர். மீண்டும் மீண்டும் 'அதிசயம் வேண்டும்' என்றாள். அதிசயம் ஒரு மருந்து எனக் குழந்தை புரிந்துகொண்டாள். எவரும் பதில் சொல்லாததால், 'என்னிடம் 1½ டாலரிருக்கிறது. மேலும் வேண்டுமானாலும் போய்க் கொண்டுவருகிறேன்' என்றாள். கடையிலிருந்த வேறொருவர் குழந்தையிடம் வந்து, 'என்னை உன் வீட்டிற்கு அழைத்துப் போ' என்றார். அவர் டாக்டர் கார்ல் ஆம்ஸ்டங் என்ற பிரபல சர்ஜன். அவர் பையனுக்குச் செலவில்லாமல் ஆப்பரேஷன் செய்தார்.

எளிய குழந்தையுள்ளம் ஏதுமறியாமல் 'அதிசயம் குணப்படுத்தும்' என்று நம்பினாள். நம்பிக்கை செயல்பட்டது. நமக்கு அறிவு குறிக்கிடுகிறது. குழந்தைக்குக் குறுக்கிட அறிவில்லை. அதனால் நம்பிக்கை செயல்படுகிறது. **உள்ள அறிவைப் புறக்கணித்து மனிதன் செயல்பட்டால், அந்த நம்பிக்கை மலையையும் நகர்த்தும் என்பது பெரியோர் வாக்கு.**

ஆரம்பத்தில் அன்னை நமக்கு நம்பிக்கையில்லாவிட்டாலும் அபரிமிதமாகச் செயல்படுகிறார். பிறகு நம்பிக்கைப் பிறந்தால் நடக்க முடியாததில்லை.

❀❀❀